விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 21.03.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 111 | பக்கங்கள் : 16


07
புத்தாண்டை முன்னிட்டு புதிய சுகாதார வழிகாட்டல்!


10
இந்தியாவின் ஆலோசனைகள் இலங்கைக்கு அவசியமில்லை


11
ஒரு மாதத்துக்குள் உரிய தீர்வு!


13
இறுதிப் போட்டியில் இலங்கை லெஜண்ட்ஸ்!

# ஜெனிவாவில் எமது ஆதரவு இலங்கைக்கே!

## சவேந்திர சில்வாவிடம் கூறினார் பாக். ஜனாதிபதி

இஸ்லாமாபாத், மார்ச் 21

ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களிப்பதாக பாகிஸ்தான் மீண்டும் தெரிவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுடனான சந்திப்பின்போது பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிப் ஆல்வி இதனை தெரிவித்தார்.

ஜெனரல் சவேந்திர சில்வா தற்போது பாகிஸ்தான் தின கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள பாகிஸ்தான் சென்றுள்ளார். இந்த பயணத்தின்போது, பாகிஸ்தான் ஜனாதிபதியை சந்தித்துப் பேசினார்.

பயங்கரவாதத்தை வெற்றிகரமாக தோற்கடித்த ஒரு நாடாக இலங்கை முன்னணியில் இருப்பதாக பாகிஸ்தான் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

பாதுகாப்பு, கல்வி, சுற்றுச்

15



## 200 அடி பள்ளத்தில் பயணிகளுடன் பாய்ந்து

# பசறையில் பஸ் கோர விபத்து: 15 பேர் பலி! 30 பேர் படுகாயம்



பதுளை, மார்ச்.21

பதுளை - பசறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பசறை - லுணுகலை பிரதான வீதியின் 13ஆம் கட்டை மெத்தக்கடை பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்ததுடன், 30இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்குள்ளாகினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

15



# ரெலோவின் செயலராக கோவிந்தம் கருணாகரன்

முல்லைத்தீவு, மார்ச் 21

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) புதிய பொதுச் செயலாளராக கோவிந்தம் கருணாகரன் தெரிவாகியுள்ளார்.

முல்லைத்தீவில் நேற்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொதுக்குழு கூட்டம் இடம் பெற்றது.

15

# நேற்று மேலும் 158 பேருக்கு கொரோனா!

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் நேற்று மேலும் 158 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை, 89 ஆயிரத்து 655 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையை, சுகாதார மேம்பாட்டு பணியகம் நேற்று இரவு வெளியிட்டது.

அதனடிப்படையில், கொரோனா தொற்றில்

15

# ஜெனிவாவில் இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் அரசியல்மயம்

## அமைச்சர் தினேஷ் சொல்கிறார்



கொழும்பு,மார்ச்.21

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பிரித்தானியா, கனடா, ஜெர்மனி உள்ளிட்ட பல நாடுகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் அரசியல்

15

# வடக்கில் மேலும் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம், மார்ச்.21

வடக்கு மாகாணத்தில் மேலும் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருவரும், முல்லைத்தீவில் ஒருவரும் இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்

15

# கடும் மன அழுத்தங்களால் எனக்கு புற்றுநோய் வந்தது!

## 9 ஆண்டுகளின் பின் மனம் திறந்த சந்திரிகா

கொழும்பு, மார்ச் 21

தனக்கு புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஆரம்ப கட்டத்தில் அடையாளம் காணப்பட்டதால் அது குணப்படுத்தப்பட்டது என்று

15

# ஜெனிவா பிரேரணைக்கு இந்தியா ஆதவளிக்கும்!

## சுமந்திரன் எம்.பி. நம்பிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21

இலங்கையில், நல்லிணக்கம், பொறுப்புக்கூறலை நிலைநாட்டும் வகையில், அடுத்த வாரம் கொண்டுவரப்படும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணைக்கு ஆதரவாக, இந்தியா வாக்களிக்கும் என தமிழ்த் தேசியக்

15

## கடும் மன...

அவர் கூறினார்.

இணையதள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் அரசியல் செய்யாமல் இருந்திருந்தால் இப்போது மிகவும் பணக்காரப் பெண்ணாக இருந்திருப்பேன். அரசியல் இப்போது மிகவும் ஆரோக்கியமானது என்று நான் கூற விரும்பவில்லை. ஆனால் என்னுடைய உடல் நலம் நன்றாக உள்ளது.

நான் இப்போது நான் ஒரு உண்மையைச் சொல்வேன். எனக்கு புற்றுநோய் ஏற்பட்டது. நான் அதிகாரத்தை விட்டுச் சென்று ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு அது ஏற்பட்டது. ஒருவருக்கு புற்றுநோய் வருவதற்கான காரணங்கள் இருக்கவேண்டும். அனால் எனக்கு என்னிடம் எந்தக் காரணங்களும் இருக்கவில்லை. எனக்கு புற்றுநோய் ஏற்பட நான் புகைப் பிடித்திருக்கவேண்டும் அல்லது நிறைய மது அருந்தியிருக்கவேண்டும். அனால் அவை ஒன்றும் என்னிடம் இல்லை.

இவை தவிர்த்து ஒரு காரணம் இருந்தது. அதுதான் நான் அதிகாரத்திலிருந்து வெளியேறிய பின் எனக்கு கடுமையான மன அழுத்தம் கொடுக்கப்பட்டது, உளவியல் ரீதியான அழுத்தங்களையும் கொடுத்தார்கள். அவற்றால் நான் கடுமையாக பாதிக்கப்பட்டேன். பின்னர் எனது கட்சியில் இணைந்தேன். அதில் இருப்பவர்களிடம் என்னிடம் பேசவேண்டாம் என்று சொன்னார்கள். நான் தனிமைப்படுத்தப்பட்டேன். இது தான் கரணம் என்று என்னுடைய மகள் எனக்கு சொன்னாள். எனக்கு மார்பகப் புற்றுநோய் ஏற்பட்டது. என்னுடைய வயதிற்கு அது ஆரம்பக்கட்டத்திலேயே கண்டுபிடிக்கப்பட்டதால் குணமாக்க முடிந்தது.

அதுவும் ஒளிக்கதிரை வைத்து சிகிச்சை செய்யப்பட்டது. இப்பொது ஒன்பது பத்து வருடங்கள் ஆகிவிட்டது-என்றார்.

## ஜெனிவாவில்...

நோக்கத்துக்காக முன்னெடுக்கப்பட்டுள்ளன என வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக பல நாடுகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில் (ஜெனிவாவில்) நாளை 22ஆம் திகதி வாக்களிப்பொன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் நேற்று வெளிநாட்டு அமைச்சில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் மேலும் குறிப்பிடுகையில்: எமது நாட்டின் உள்ளக விடயங்கள் தொடர்பில் குற்றம் சாட்டுவது அல்லது வாக்களிப்பது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் பேரவையின் பொறுப்பான செயல்பாடு அல்ல.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் எமது நாட்டுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் பல ஆண்டுகளாக சுமத்தப்பட்டுள்ளன. இது குறித்து நாங்கள் கவனமாக இருந்தோம். எமது அரசாங்கத்தின் தேர்தலுக்குப் பின்னர் மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தை செயல்படுத்துவதற்காக வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் இதுபோன்ற பல சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகையில், எமக்கு எதிராக பல்வேறு வழிகளில் குற்றங்களைச் சுமத்தி, ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையில் அதனை மீண்டும் மீண்டும் புறக்கணிப்பது நியாயமில்லை.

எங்கள் மீது சுமத்தப்பட்ட தவறான குற்றச்சாட்டுக்களை தோற்கடிப்பதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம். பல நட்பு நாடுகள் இதற்காக எங்களுடன் கைகோர்த்து வருகின்றன. இந்தத் தடவை இந்தியாவும் எங்களுக்கு ஆதரவளிக்கும் என நம்புகின்றோம்- என்றார். (எ)

## ஜெனிவா பிரேரணை...

கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியாவின், தி ஹிந்து நாளிதழுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாக்களிப்பதா அல்லது விலகுவதா என தீர்மானிப்பது, இந்தியாவின் விடயம்.

ஆனால், தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்பது, நமது நிலைப்பாடு.

2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தல்களுக்கு பின்னர், பாராளுமன்றத்தில், வடக்கு-கிழக்கு தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப் பெரிய கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளது.

2009 ஆம் ஆண்டு முதல் இலங்கை தொடர்பான ஐ.நா தீர்மானங்களை, குறிப்பாக 2009, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மூன்று முறை ஆதரித்துள்ளது.

இந்த பிரேரணையைத் தோற்கடிக்க, இலங்கை அரசாங்கம் இந்தியாவின் ஆதரவை உயர் மட்டத்தில் கோரியுள்ளது.

இம்முறை, இந்தியா பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை-என்றார்.

இதேவேளை, இலங்கைக்கு, இந்தியா தனது ஆதரவை வழங்குவதாக உறுதி அளித்துள்ளது என, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே கூறியுள்ளார்.

இருப்பினும், குறித்த கருத்து தொடர்பாக, புதுடில்லி உத்தியோகபூர்வமாக எந்த அறிக்கையையும் வெளியிடவில்லை.

## வடக்கில்...

என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை ஆய்வுகூடத்தில் 419 பேரின் மாதிரிகள் நேற்றுப் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை தனிமைப்படுத்தல் விடுதியில் கொரோனா தொற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட சுண்டுக்குழியைச் சேர்ந்த 37 வயது ஆணொருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, சாவகச்சேரி வைத்திய சாலையில் கொரோனா அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட பெண்ணொருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட தொற்றாளருடன் தொடர்புடையவர்.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் பெண்ணொருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர் ஆடைத் தொழிற்சாலை தொற்றாளருடன் தொடர்புடையவர் என மருத்துவர் கேதீஸ்வரன் குறிப்பிட்டார். (எ)

## ஜெனிவாவில் எமது...

சூழல் மற்றும் வர்த்தகம் ஆகிய துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் பாகிஸ்தான் ஜனாதிபதி ஆரிப் ஆல்வி வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் இராணுவம் இலங்கைக்கு பல ஆண்டுகளாக வழங்கிய ஆதரவை இராணுவத் தளபதி பாராட்டியுள்ளார்.

கடினமான காலங்களில் பாகிஸ்தான் நிபந்தனையின்றி இலங்கையை ஆதரித்ததாகவும், நாட்டின் உண்மையான நண்பராகவும் இருப்பதாகவும் ஜெனரல் சவேந்திர சில்வா குறிப்பிட்டார்.

# வடக்கு காணி விடயம் இன்று முக்கிய பேச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாணத்தில் உள்ள காணி பிரச்னைகள் தொடர்பில் இன்று தேசிய காணி ஆணையாளருடன் சந்திப்பை மேற்கொள்ளவுள்ளதாக தேசிய மீனவர் இயக்கத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் என்.இன்பன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ் மாவட்டத்தில் உள்ள காணி விடயங்கள் தொடர்பாகவும், மக்களுடைய நிலைமைகள் தொடர்பாகவும் பொது அமைப்புக்கள் மற்றும் வலி வடக்கு மீள்குடியேற்றப் பகுதி மக்களுடன் ஆராயப்பட்டது.

தேசிய காணி ஆணையாளருடன் காணி விடயங்கள் தொடர்பில் பேசப் படவேண்டிய விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தோம். குறிப்பாக வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரை பல்வேறுபட்ட காணிபிரச்னைகள் காணப்படுகின்றன.

நில ஆக்கிரமிப்பு மற்றும் இராணுவ முகாம்கள் மற்றும் ஏனைய முப் படையினருக்கு தேவையான காணி அபகரிப்பு போன்ற பல்வேறு பிரச்னைகள் காணப்படுகின்றன. எனவே அவ்வாறான பிரச்னைகள் தொடர்பில் தேசிய ஆணையாளருடன் இன்று பேச உள்ளோம்-என்றார்.

# மோட்டார் குண்டு வெடித்து குடும்பஸ்தர் உயிரிழப்பு!

திருகோணமலை, மார்ச்.21

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சீனன்வெளிப் பகுதியில் 81 ரக மோட்டார் குண்டு வெடித்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார் என சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் வைத்திருந்த மோட்டார் குண்டை கிரைண்டர் மெசின் மூலமாக அறுத்து மருந்துகளை எடுக்க முற்பட்டபோது குண்டு வெடித்துள்ளதாகவும், இதன்போதே அவர் உயிரிழந்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்தது.

இந்தச்சம்பவத்தில் உயிரிழந்தவர் சீனன்வெளி பகுதியைச் சேர்ந்த அல்லிமுத்து ஜெகன் (வயது-45) என்ற குடும்பஸ்தர் ஆவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

# வவுனியாவில் குண்டு மீட்பு!

வவுனியா, மார்ச் 21

வவுனியா கொந்தக்காரங்குளம் பகுதியில் உள்ள தோட்ட காணியிலிருந்து கைக்குண்டு ஒன்றை ஓமந்தை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். நேற்று மாலை வவுனியா கொந்தக்காரங்குளம் பகுதியில் உள்ள தனியார் தோட்ட காணியை அதன் உரிமையாளர் உழவியந்திரம் மூலம் பண்படுத்தியுள்ளார். இதன்போது குறித்த காணியில் கைக்குண்டு இருப்பதை அவதானித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஓமந்தை பொலிஸாருக்கு தெரியபடுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கைக்குண்டை மீட்டனர்.

எனினும் மண்ணில் புதையுண்டு வெடிபொருட்கள் இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசேட அதிரடிபடையினருக்கும் தகவல் தெரிவித்தனர். நீதிமன்றின் அனுமதியுடன் அந்த பகுதியில் சோதனை மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ரெலோவின்...

இதில் செயலாளர் பதவிக்கு இருவர் தெரிவு செய்யப்பட்ட நிலையில் இறுதியில் வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பசறையில்...

இந்தக் கோர விபத்து நேற்றுக் காலை 6.55 மணியளவில் இடம்பெற்றது.

பசறை லுணுகலை பகுதியிலிருந்து கொழும்புக்கு பயணிகளை ஏற்றிக் கொண்டு பயணித்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது.

குறித்த பஸ் வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் பாய்ந்து இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

விபத்தில் பஸ் சாரதி உட்பட 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில், பசறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் சிலர் பதுளை வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்க வாய்ப்பு இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## நேற்றும் மேலும்...

இருந்து, மேலும் 239 பேர் குணமடைந்துள்ள நிலையில், இதுவரை, 86 ஆயிரத்து 466 தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர்.

அதனால், குணமடைந்தவர்களைத் தவிர்த்து, தற்போது 2 ஆயிரத்து 645 பேர், வைத்தியசாலைகள் மற்றும் கொரோனா சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இருப்பினும், கொரோனா தொற்றுக் காரணமாக, இதுவரை 544 பேர் உயிரிழந்துள்ளனர்.

## பங்களாதேஷை...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுபடாத இலங்கைக்குள் ஒரு சுயாட்சியுள்ள பிரதேசமாக அமைக்கவே அரசியல் ரீதியாக உதவியிருந்தது. நாளடைவில் இராணுவ ரீதியாகவும் தனது நோக்கத்தை நிறைவேற்ற இந்தியா முன்வந்திருந்தது.

ஆகவே, தமிழ் ஆயுத போராட்ட அமைப்புகள் எதிர்பார்த்ததைப்போல, பங்களாதேஷ் உருவாக்கத்தில் செயல்பட்டதைப்போல இலங்கை விவகாரத்தில் இந்தியா செயல்பட்டிருக்கவில்லை. ஆனால், இந்தியா அன்று மாத்திரமல்ல இன்றுங்கூட, தனது பிராந்திய நலன்களை பாதுகாக்கவே இலங்கைப் பிரச்னையை பாவித்து வருவதே கண்கூடு. இதுவிடயத்தில் இலங்கையின் தமிழ் அரசியல் தரப்பு மட்டுமல்ல. தென்னிலங்கையும் இந்தியாவிடம் அடங்கியிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

## இதுவும் நடந்தது!

எண்பத்தி நான்கின் ஆரம்பப்பகுதி. அப்போது வடக்கில் முப்பதுஐந்துக்கும் அதிகமான ஆயுத இயக்கங்கள் இயங்கிக்கொண்டிருந்தன.

இந்த ஊர்க்குருவி அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது, கொழும்பிலிருந்து வந்திருந்த சக அலுவலரை சித்தன்கேணியில் உள்ள அவரது இல்லத்தில் இறக்கிவிட்டு அப்படியே வீடுதிரும்ப வேண்டிய நிலை.

அது வேறு பாதையினால்தான் போகவேண்டும் என்றாலும் வேறு வழியின்றி போகவேண்டியிருந்தது. போகும்போது பொம்மைவெளியில் வைத்து கார் ஒன்றில் வந்த ஆயுததாரிகள் எங்கள் இருவரையும் அருகே இருந்த காட்டுப்பகுதிக்கு கடத்திச் சென்றனர். இருவரையும் தனித்தனியே அழைத்துச் சென்றவர்கள் எங்களிடமிருந்த பணம், மற்றும் பொருட்களை எடுத்துக்கொண்டு அந்த அடர்ந்த காட்டுக்குள்ளேயே விட்டுவிட்டு சென்றுவிட்டனர். அப்போதுதான் எமக்கு உயிர் வந்தது. அவர்களுக்கு தேவைப்பட்டது இந்த ஊர்க்குருவியின் விரலில் இருந்த மோதிரமும், நண்பரின் கழுத்திலிருந்த சங்கிலியும்தான் என்பது. அடுத்த நாள் செய்தி, பத்திரிகைகளில் வெளிவர, சிலரின் படங்களுடன் எங்களை அணுகிய சில இளைஞர்கள், எங்களைக் கடத்தியவர்கள் யார் என்பதை அந்த படங்களின் மூலம் அடையாளம் கண்டுகொண்டனர்.

மறுநாளே, எங்களைக்கடத்தியவர்கள் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர். அதன்பின்னர்தான் தெரிந்தது, முப்பத்தி ஐந்து இயக்கங்களில் ஒன்றின் தலைவர் தான் இந்த ஊர்க்குருவியையும் நண்பரையும் கடத்தியது என்பது.

இந்த சம்பவத்தைப்பற்றி இப்போது எதற்கு என்று நினைக்கலாம். உண்மைதான். ஆனால், காணாமல்போனவர்களை கண்டறிவதற்காக இயங்கிக்கொண்டிருக்கும் அமைப்புக்களைப் பற்றிய செய்திகளைப் படிக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஞாபகம் வருபவை இந்த இயக்கங்கள்தான்.

காணமல் போனவர்களுக்கு நீதி கிடைக்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், அந்த நீதிக்கான போராட்டம் ஒவ்வொரு அரசியல் கட்சியினதும் விருப்பத்திற்காக வெவ்வேறு பிரிவுகளாக பிரிந்து நின்று போராடத்தான் வேண்டுமா என்பதை கேட்காமல் இருக்கவும் முடியவில்லை.

யுத்தம் முடிவடைந்து சில மாதங்களில் முதல் முதலாக ஒரு போராட்டம் வவுனியாவில் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் அனைத்து கட்சிகளினதும் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர். அவ்வாறு கலந்துகொண்ட ஒரு தாயாரிடம், ஊடகவியலாளர் ஒருவர் 'மைக்'கை நீட்டி, 'அம்மா உங்கள் மகனை யார் கடத்தியது' என்று கேட்டார். அதற்கு அந்தத் தாயார், ஒரு இயக்கத்தின் பெயரைச் சொல்லி, 'அந்த .... நாய்கள் தான் கடத்தியது' என்றார்.

ஆனால் அந்தப் போராட்டத்தின் முன்வரிசையில் அந்த இயக்கத்தின் தலைவரும் அமர்ந்திருந்தார்.

அண்மையில் இவ்வாறு காணாமல்போனோருடைய பிரச்னைகள் தொடர்பாக பேசுவதற்காக அமைச்சர் டக்ளஸ் அழைப்பு விடுத்தபோது அவரைச் சந்திக்க சில அமைப்புக்கள் மறுத்துவிட்டதுடன், அதுதொடர்பாக காட்டமான அறிக்கைகளையும் விடுத்திருந்தன. ஆனால், அதையும் மீறி அவரை ஏராளமானவர்கள் சந்தித்திருந்தனர்.

இறுதி யுத்தத்தில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு சர்வதேச நீதிமன்றில் தண்டனை வாங்கிக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கைக்கும், இந்த காணாமல் போனவர்களின் பிரச்னைக்கும் உள்ள வேறுபாடுகளை நம்மவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். காணாமல் போனவர்களில் கணிசமானவர்கள் நம்மவர்களாலேயே காணாமல் போனார்கள். அவர்களின் இந்த அவலத்தை தத்தமது சொந்த அரசியலுக்காக பயன்படுத்துவதை முதலில் அரசியலாளர்கள் தவிர்க்கவேண்டும்.

இவர்கள் அனைவரும் ஒரு அமைப்பாக முதலில் இயங்குவது தொடர்பாக சிந்திக்கவேண்டும்.

87ஆம் ஆண்டுக்கு முன்னதாக, எவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கம் ஏனைய அனைத்து இயக்கங்களையும் மேவி தனித்த ஒரு பலமான சக்தியாக எழுந்து வந்ததோ, அதே போலவே காணாமல் போனோருக்கு நீதி தேடும் உறவுகளின் ஒரே ஒரு இயக்கம், தனித்த ஒரு பலமான சக்தியாக, ஏதாவது ஒரு அதிகாரம் மிக்க சக்தியால் உருவாக்கப்பட வேண்டும். அதுவே இன்றைய தேவை.

அவ்வாறு இல்லாதவிடத்து, எவ்வாறு போராட்ட இயக்கங்கள் வெளிச்சக்திகளால் அன்று பலவாறு கையாளப்பட்டு வீரியம் இழக்கச் செய்யப்பட்டனவோ, அதே நிலைமையே காணாமற் போனோருக்கு நீதி தேடும் போராட்டத்திற்கும் நடக்கும்.

**- ஊர்க்குருவி.**

# இலங்கையில் முஸ்லிம்களை இலக்குவைத்து மனித உரிமை மீறல்கள் அதிகரிக்க வாய்ப்பு!

### சர்வதேச மன்னிப்புச்சபை அச்சம்

**கொழும்பு, மார்ச்.21**

**இலங்கையில் முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படாவிட்டால், முஸ்லிம் சமூகத்தை இலக்குவைக்கும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரிக்கலாம் என்றும் அதன் விளைவாக நிலைபேறான சமாதானத்தை உறுதி செய்வதற்கான முயற்சிகள் பாதிக்கப்படக்கூடும் என்று அஞ்சுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.**

இலக்குவைக்கப்படும் இலங்கையின் முஸ்லிம் சமூகமும், அதிகரித்து வரும் ஓரங்கட்டப்படலும் என்ற தலைப்பில் சர்வதேச மன்னிப்புச்சபையால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.


அண்மைக்காலத்தில் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள சில தீர்மானங்கள் முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்திருப்பதுடன், அந்தச் சமூகத்தை ஓரங்கட்டும் வகையிலும் அமைந்துள்ளன. அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட யோசனைகள், தீர்மானங்கள் மற்றும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி வழிகாட்டல்கள் என்பன இலங்கையின் மொத்த சனத்தொகையில் 9 சதவீதமாகவுள்ள முஸ்லிம் சமூகத்தின் மீது பாகுபாடு காண்பிக்கும் வகையில் அமைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அண்மைக்காலத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாயத் தகனத்துக்கு உட்படுத்தும் வகையில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த தீர்மானம் மற்றும் முஸ்லிம் சமூகத்தை இலக்கு வைத்து இடம்பெற்ற வன்முறைகள் போன்றவற்றை உதாரணமாகக் குறிப்பிடமுடியும்.

இம்மாதத்தில் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் 13 ஆம் திகதிக்கு இடைப்பட்ட 9 நாள்களில் முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்து அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், அமைச்சரவை யோசனைகள் மற்றும் முன்மொழிவுகள் என்பன பதிவாகியுள்ளன.

அவற்றின் புர்கா மற்றும் நிஹாபை தடைசெய்வதற்கான அமைச்சரவை யோசனை, மத்ரஸா பாடசாலைகளைத் தடைசெய்வதற்கான அமைச்சரவை யோசனை, நாட்டில் வெளிவரும் அனைத்து இஸ்லாமிய நூல்களையும் கண்காணிப்புக்கு உட்படுத்தல், இன மற்றும் மத ரீதியிலான அடிப்படைவாதச் செயல்கள், வன்முறைகளில் ஈடுபடுவோரைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் போன்ற விடயங்கள் பதிவாகியுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

# இலங்கை - பங்களாதேஷ் பிரதமர்கள் விஷேட சந்திப்பு





*டாக்கா, மார்ச்.21*

பங்களாதேஷூக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், பங்களாதேஷ் பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனாவுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு டாக்காவில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு சந்திப்பு ஆரம்பமாவதற்கு முன்னர் இடம் பெற்றது. பங்களாதேஷ் பிரதமர் அலுவலகத்துக்கு சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அந்நாட்டு பிரதமர் சிறந்த முறையில் வரவேற்றார்.

இச்சந்திப்பின் போது பிரதமர் மஹிந்த தெரிவித்தவை வருமாறு:

2011ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜனாதிபதியாக பதவி வகித்த வேளை பங்களாதேஷூக்கு உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற்கொண்ட போது என்னையும், எனது பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவையும் சிறந்த முறையில் வரவேற்றமை இன்றும் நினைவில் உள்ளது.

1998 ஆம் ஆண்டு வலய ஒத்துழைப்பு தொடர்பிலான தெற்காசிய (சார்க்) மாநாட்டிலும், 2013 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொது நலவாய அரச தலைவர்கள் மாநாட்டிலும் நீங்கள் கலந்துக் கொண்டமை நினைவில் உள்ளது.

எமது இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு 2022 ஆம் ஆண்டு 50 ஆவது வருடத்தை நோக்கி செல்கிறது என்பதை தாங்கள் அறிவீர்கள். இதனை கொண்டாடும் வகையில் எனது இராஜதந்திர அதிதியாக நீங்கள் இலங்கைக்கு வருகை தர வேண்டும் என்று பெருமிதத்துடன் அழைப்பு விடுக்கிறேன்.

இந்த விசேட நிகழ்விற்கு பங்களாதேஷ் நாட்டுக்கு வருகை தந்துள்ளமைக்கும், உங்களை தனிப்பட்ட முறையில் சந்தித்தமைக்கும் பெருமகிழ்ச்சியடைகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பங்களாதேஷ் பிரதமரிடம் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பங்களாதேஷ் நாட்டுக்கான விஜயம் தனிப்பட்ட முறையில் தனக்கும், பங்களாதேஷ் நாட்டு மக்களுக்கும் கௌரவமானது என்று இதன் போது பங்களாதேஷ் நாட்டு பிரதமர் திருமதி ஷெயிக் ஹசீனா பிரதமரிடம் தெரிவித்தார். (எ)

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu
21.03.2021 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, பங்குனி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# உரிமை மீறலில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான தடை!

இன்னும் இரு தினங்களில் இலங்கையின் மீதான புதிய பிரேரணை விவகாரம் முடிவுக்குவரவுள்ளது. இதில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதானது. பிரித்தானியாவினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் புதிய பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பில் பிரேரணை வெற்றிபெறும். ஏனெனில், பிரேரணையை வெற்றிகொள்ள முடியாவிட்டால் நிச்சயம் பிரித்தானியா அதனை சமர்ப்பிக்காது. ஒருவேளை, வாய்ப்புக்கள் மிகவும் குறைவாக இருப்பின், பிரித்தானியா பிரேரணையை மீள எடுத்துக்கொள்ளும். ஆனால், அதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதானது. ஒருவேளை அவ்வாறு நடந்தால், இலங்கை விவகாரம் முழுமையாக மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியில் எடுக்கப்பட்டுவிடும். அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுமாக இருந்தால், இலங்கை இந்த இராஜதந்திர நகர்வில் முற்றிலுமாக வெற்றிபெற்றுவிடும். ஏனெனில், ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இலங்கை விவகாரத்தை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்புக்கள் தற்போதில்லை. ஏனெனில் அதற்கு ஒரு நாடு முன்வர வேண்டும். அதேவேளை, உறுப்பு நாடுகளில் 50 விகிதமான நாடுகளின் ஆதரவை பெறவேண்டும். தமிழர்களை பொறுத்தவரையில் அதற்கான வாய்ப்புக்கள் இல்லை.

எனவே இந்த பின்புலத்தில் நோக்கினால், பிரித்தானியாவின் புதிய பிரேரணை வெற்றிபெறவேண்டிய தேவை, மேற்குலகைப் பொறுத்தவரையில் முக்கியமாக, பிரித்தானியவை பொறுத்தவரையிலும் உண்டு. எனவே, வாய்ப்புக்களை சரியாக மதிப்பிட்டே பிரித்தானியா காய்களை நகர்த்தும். அதேவேளை, பிறிதொரு விடயம் தொடர்பிலும் பிரித்தானியா தற்போது பேசத் தொடங்கியிருக்கின்றது. அதாவது, இலங்கையில் மனித உரிமைகளை மீறியவர்களுக்கு எதிரான பயணத்தடைகளை விதிப்பது தொடர்பிலும் ஆராயவுள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு அறிவித்திருக்கின்றது. இதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாக ‘ஈழநாடு’ கருதுகின்றது. ஏனெனில், ஏற்கனவே அமெரிக்கா, இலங்கையின் இராணுவ தளபதி, ஜெனரல் சவேந்திர சில்வாவிற்கு எதிராக பயணத்தடையை விதித்திருக்கின்றது.

சவேந்திர சில்வாவும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்குள் நுழைய முடியாது. அதேவேளை, அண்மைய பாராளுமன்ற உரையொன்றில் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா, 52 இராணுவ அதிகாரிகள் மேற்கு நாடுகளுக்கு செல்லமுடியாத நிலைமையிருப்பதாக தெரிவித்திருக்கின்றார். இவ்வாறானதொரு பின்புலத்தில், அமெரிக்க தடையை அடிப்படையாகக் கொண்டு, பிரித்தானியாவும் சில பயணத் தடைகளை ஏற்படுத்தக்கூடும். புதிய பிரேரணையை பிரித்தானியா கொண்டுவந்திருப்பதால், இலங்கையின் மனித உரிமைகளை பாதுகாப்பதில் பிரித்தானியா கூடுதல் கரிசனையை காண்பிக்க வேண்டிய தேவையுள்ளது. உண்மையில், பிரித்தானியா இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் கூடுதலான பொறுப்பை ஏற்றிருக்கின்றது. முன்னர் அமெரிக்கா இந்த பணியை மேற்கொண்டிருந்தது. ஆகக்குறைந்தது, அமெரிக்கா மீளவும் இந்த விடயத்தை கையிலெடுக்கும் வரையிலாவது பிரித்தானியா இலங்கையின் மனித உரிமைகள் விடயத்திற்கு, மேற்குலகின் சார்பில் தலைமை தாங்கவேண்டிய நிலையிருக்கின்றது.

எனவே இந்த பின்புலத்தில் நோக்கினால், பிரித்தானிய அரசு, இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள்மீது, பயணத் தடைகளை விதிப்பதற்கான வாய்ப்புக்கள் பிரகாசமாக இருப்பதாகவே, ‘ஈழநாடு’ கணிக்கின்றது. பெரும்பாலும், அமெரிக்காவினால் பயணத் தடைக்குள்ளாகியிருக்கும் இராணுவ தளபதியின்மீது பிரித்தானியாவும் தடைகளை விதிப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு. தற்போதைய ராஜபக்ஷ அரசாங்கம், மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றங்களை காண்பிப்பதற்கு மறுத்துவரும் நிலையில் பிரித்தானியா, இலங்கையின் மீதான அழுத்தங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

# பங்களாதேஷை முன்மாதிரியாக கருதிய இலங்கையின் வடக்கு - கிழக்கு ஆயுதப் போராட்டம்!

- அலசுவது **இராஜதந்திரி** -

**1971**ஆம் ஆண்டு இந்தியாவினால் உருவாக்கப்பட்ட தேசமே பங்களாதேஷ். இந்த ஆண்டு பங்களாதேஷ் உருவாக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளன. இதனை முன்னிட்டு பங்களாதேஷில் சுதந்திர பொன்விழா கொண்டாட்டங்கள் களைகட்டியுள்ளன. இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இலங்கையின் அதிதியாக பங்களாதேஷின் சுதந்திர பொன்விழா கொண்டாட்டங்களில் பங்கு பற்றுகின்றார்.

இந்தியா பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்தபோது பாகிஸ்தானும் மேற்கு - கிழக்கு என இரு பாகங்களாக இந்திய உபகண்டத்திலிருந்து பிரிந்து சுதந்திர நாடானது. இந்தியாவுக்கு மேற்கே பாகிஸ்தனும் கிழக்கே பங்களாதேஷ் கிழக்கு பாகிஸ்தான் எனவும் ஒரே நாடாக, இந்தியாவுக்கு மேற்கிலும், கிழக்கிலும் அமைந்திருந்தன. இக்கட்டத்திலேயே பங்களாதேஷ் பாகிஸ்தானிடமிருந்து பிரிந்து, ஒரு தனிநாடாகும் போராட்டத்தை ஆரம்பித்திருந்தது.

இந்தியாவின் பகை நாடான பாகிஸ்தான் கிழக்கிலும், மேற்கிலும் அமைந்திருந்து, ஓர் அச்சுறுத்தலாக இருப்பதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. இக்கட்டத்திலேயே பாகிஸ்தானிடமிருந்து பிரிந்து சென்று ஒரு தனிநாடாகும் சுதந்திர போராட்டத்தை பங்களாதேஷ் ஆரம்பித்தது.

**முஜிபுர் ரஹ்மான்**

இந்தியாவும் இப்போராட்டத்தை, பாகிஸ்தானை கிழக்கு பாகிஸ்தானிடமிருந்து பிரித்து விடுவதற்கான ஒரு நல்ல வாய்ப்பாக பயன்படுத்தியிருந்தது. பங்களாதேஷ் சுதந்திரத்தின் பிதாமகரான ஷேக் முஜிபுர் ரஹ்மான் அச்சமயம் இந்திய பிரதாமராக இருந்த இந்திரா காந்தியின் தயவை பங்களாதேஷின் உருவாக்கத்துக்காக நாடியிருந்தார். இதன் காரணமாக இந்தியாவும் இராணுவ ரீதியாக செயலில் இறங்கி, பாகிஸ்தானை மண்கவ்வ வைத்து, பங்களாதேஷ் என்ற புதிய தேசத்தை உருவாக்கி விட்டிருந்தது.

பங்களாதேஷ் சுதந்திர போராட்டம் அந்நாட்டில் இரு முனைகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பங்களாதேஷின் ஸ்தாபகர் முஜிபுர் ரஹ்மான் இந்தியாவின் அனுசரணையோடு போராட்டத்தை முன்னெடுத்தவேளை, கிழக்கு பாகிஸ்தானின் முக்திபாஹினி என்ற தீவரவாத அமைப்பும் பாகிஸ்தானுக்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. இதன்காரணமாக, பங்களாதேஷின் சுதந்திர போராட்டத்துக்கு இந்தியா தனது பங்களிப்பை இராணுவ ரீதியாக வழங்கி, பாகிஸ்தானை தோற்கடிப்பதில் பலத்த சவால்களை எதிர்நோக்கியிருக்கவில்லை. அச்சமயம், பாகிஸ்தான் இராணுவ ஆட்சிக்குட்பட்டிருந்ததோடு, அந்நாட்டின் இராணுவ ஆட்சியாளராக ஜெனரல் யஹ்யாகான் விளங்கினார்.

**பீல்ட் மார்ஷல் சாம் மனெக்ஷா**

இந்தியாவின் இராணுவத்துக்கு அன்று தலைமை வகித்தவர் பீல்ட் மார்ஷல் சாம் மனெக்ஷா என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் பீலட் மார்ஷல் சாம் மனனெக்ஷாவின் யுத்த தந்திரங்கள் பிரமிக்கத்தக்கவையாக இருந்தன. யுத்தம் ஆரம்பமாகி குறிப்பிட்ட சிலகாலத்தில் அதனை பாரியளவிலான பாகிஸ்தான் படையினரின் சரணாகதியோடு முடிவுக்கு கொண்டுவருவதில் பீல்ட் மார்ஷல் மனெக்ஷாவின் பங்களிப்பு அபரிமிதமானதாக அமைந்திருந்தது. இந்திய இராணுவத்தின் இப்பாரிய வெற்றியிலேயே பங்களாதேஷ் என்ற புதிய தேசமும் உருவாகியிருந்தது.

இது இவ்வாறிருக்க, பங்களாதேஷின் சுதந்திர போராட்டமும் இலங்கையின் வடக்கு-கிழக்கில் தனிநாடு கோரிய ஆயுத போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஓர் உந்து சக்தியாக அமைந்திருந்தது. பங்களாதேஷை உருவாக்கவதற்கு முன்வந்ததுபோல, இலங்கையிலும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை ஒரு தனிநாடாக பிரிக்க இந்தியா உதவலாம் என்ற எதிர்பார்ப்பு தமிழ் தீவரவாத அமைப்புகளிடம் காணப்பட்டது.


பங்களாதேஷ் சுதந்திர போராட்டத்தில் இந்தியா குதிப்பதற்கு அரசியல் ரீதியாக பாகிஸ்தானின் ஒரு பாகமாக கிழக்கு பாகிஸ்தான் இருப்பதை இந்தியா விரும்பியிருக்காத அதேசமயம், கிழக்கு பாகிஸ்தான் என்றழைக்கப்பட்ட பங்களாதேஷில் இருந்து பல்லாயிரக்கணக்கில் பங்களாதேஷ் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்குள் அடைக்கலம் தேடியிருந்தனர். எனவே, இந்தியாவில் பங்களாதேஷ் அகதிகளின் வருகையால் மனிதாபிமான பிரச்னை அதிகரித்ததையும் காரணங்காட்டியே இந்தியா கிழக்குப் பாதகிஸ்தான் யுத்தத்தில் குதித்து, பங்களாதேஷ் என்ற புதிய நாட்டை உருவாக்கியிருந்தது.

இந்தியாவுக்குள் பங்களாதேஷ் அகதிகள் பாரியளவில் நுழைந்ததைப்போன்றே வடக்கு-கிழக்கு யுத்தம் ஆரம்பமானதும் பல்லாயிரக்கணக்கில் பாக்கு நீரிணையைக் கடந்து, வடக்கு-கிழக்கு மக்களும் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்தனர். இதன் காரணமாக அகதிகள் நெருக்கடியால் இந்தியா இலங்கை விவகாரத்தையும் பங்களாதேஷ் விவகாரத்தைப்போல கையாள முடியம் என்ற நப்பாசையும் இலங்கையின் தமிழ் ஆயுதப்போராட்ட அமைப்புகளிடம் காணப்பட்டிருந்தது.

ஆனால், இந்தியாவின் பார்வை இலங்கை மீது வித்தியாசமானதாகவே இருந்தது. இலங்கையின் தமிழ் தீவிரவாத அமைப்புகளுக்கு பயிற்சியளித்து அடைக்கலம் வழங்கிய இந்தியா, இலங்கைத் தமிழர்களுக்கு தனிநாடொன்றை பிரித்து வழுங்குவதற்கு பதிலாக, வடக்கு-கிழக்கு மாகாணங்களை

(15ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



மார்ச் - 21 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 08
நல்ல நேரம் : 7.30 - 09.00
ராகு காலம் : 04.30 - 06.00
திதி : அஷ்டமி



## இன்றைய ராசிபலன்

21.03.2021

**மேடம்**
சிறு சிறு தொல்லைகளை சமாளிக்க வேண்டி இருக்கும். புதியவர்களுடன் பழகும்போது கவனம் தேவை. மன உற்சாகம் உண்டு. கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். மனம் தெளியும்.

**இடபம்**
தடைகள் விலகி தனலாபம் கிடைக்கும் நாள். புதிய மனிதர்களின் அறிமுகத்தால் தொழில் வளர்ச்சி கூடும். முக்கிய புள்ளிகள் முன்னேற்றத்திற்கு வழிவகுப்பர். நல்ல தகவல் இல்லம் தேடிவரும்.

**மிதுனம்**
பணியிடத்தில் சற்று கவனமாக பேசுவது நல்லது. மனப்பக்குவம் அதிகரிப்பதால் வாக்குவாதங்கள் அகலும்.அக்கம் பக்கத்தினருடன் இருந்த சிறு பிரச்னை முடியும்.

**கடகம்**
குடும்பத்தில் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது.கவுரவம் குறையாமல் காப்பாற்றிக் கொள்வீர்கள். பேச்சில் கவனம் தேவை. திறமையால் பணிச்சுமையை சமாளித்து வெல்வீர்கள்.

**சிம்மம்**
உத்தியோக முன்னேற்றம் ஏற்படும் நாள். உடன் பிறப்புகளின் ஒத்துழைப்பு கிட்டும். பொதுவாழ்வில் முக்கிய பொறுப்புகள் வந்து சேரலாம். இடம், பூமியால் ஏற்பட்ட இன்னல்கள் தீரும்.

**கன்னி**
பேச்சில் உணர்ச்சி வசப்படாமல் இருப்பது நல்லது. இன்று புதுப்புது வாய்ப்புகள் வந்து மகிழ்ச்சிக்குள்ளாக்கும்.பணியாளர்கள் கவனமாக இருந்து பாராட்டுப்பெறுவீர்கள்.

**துலாம்**
கவனக் குறைவால் கவலைகள் ஏற்படும் நாள். உறவினர் வழியில் மனக்கசப்பு உருவாகும். விரயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வீண்பழிகள் ஏற்படலாம். எதையும் துணிந்து செய்ய இயலாது.

**விருட்சிகம்**
மனக்கலக்கம் ஏற்படும் நாள். நேற்றைய பிரச்சினை இன்று நீடிக்கும். சொத்து விற்பனையால் சொந்தங்கள் எதிரியாகலாம். உத் தியோகத்தில் சக பணியாளர்களால் தொல்லையுண்டு.

**தனுசு**
முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் நாள். வருமானம் போதுமானதாக இருக்கும். நேற்று எடுத்த முடிவை இன்று மாற்றிக் கொள்வீர்கள். பொதுவாழ்வில் புகழ் கூடும்.

**மகரம்**
அமைதி குறையும் நாள். சந்திக்கும் நண்பர்களால் விரயம் உண்டு. பிறரை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. முக்கிய புள்ளிகளின் பகையால் முன்னேற்றத்தில் பாதிப்பு ஏற்படும்.

**கும்பம்**
அமைதி குறையும் நாள். சந்திக்கும் நண்பர்களால் விரயம் உண்டு. பிறரை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. முக்கிய புள்ளிகளின் பகையால் முன்னேற்றத்தில் பாதிப்பு ஏற்படும்.

**மீனம்**
உழைப்பினால் நற்பலன் உண்டாகும். மன உறுதி பிறக்கும்.புதிய நண்பர்கள் அணுகினால் விசாரித்துச் சேர்த்துக் கொள்ளலாம்.பாராட்டும், வெற்றியும் கிடைக்கும். இலாபம் அதிகரிக்கும்.

# மிகநேர்மையான அரசியலை 5 ஆண்டுகளில் நிரூபிப்பேன்

### கமல்ஹாசன் கூறுகிறார்



**பொள்ளாச்சி, மார்ச் 21**

**"எங்களுக்கு ஆதரவு கொடுத்தால், ஐந்து ஆண்டுகளில் நேர்மையான அரசியலை நிரூபிப்பேன்,"என, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் பேசினார்.**

பொள்ளாச்சி, வால்பாறை தொகுதியில் போட்டியிடும் மக்கள் நீதி மய்யம் வேட்பாளர்களை ஆதரித்து கமல்ஹாசன் பொள்ளாச்சியில் பேசியவை வருமாறு:-

அரசியலுக்கு அஸ்திவாரம் நேர்மை. அந்த நேர்மை காக்க களத்துக்கு வந்துள்ளோம். எங்களுக்கு ஆதரவு கொடுத்தால், ஐந்து ஆண்டுகளில் நேர்மையான அரசியலை நிரூபிப்பேன்.

இங்கு வந்துள்ள கூட்டம், பிரியாணி, குவார்ட்டருக்காக வரவில்லை. இங்கே வந்துள்ளவர்கள், 100 பேரிடமும் அவர்கள் இன்னும், 100 பேரிடம் என்னை கொண்டு சேர்த்தால், பொள்ளாச்சி நம்முடையதாகும். வாக்குறுதியை காப்பாற்ற வேண்டிய கடமை என்னிடம் உள்ளது. இதற்காக பாண்டு பத்திரத்தில் கையெழுத்து போட்டுத் தருகிறேன்.

பணம் வாங்கி வாக்கு போட்டால், ஐந்து ஆண்டு வாழ்க்கையை குத்தகை போட்டு அவர்கள் கையில் கொடுத்து விடுவார்கள். இதற்கு மாற்று அரசியலுக்காகத்தான் வந்துள்ளேன். - என்றார்.

(அ)



# நாம் தமிழர் இருக்கும்வரை பா.ஜ.க. வராது!

### சீமான் பேச்சு

இராமநாதபுரம், மார்ச் 21

நாம் தமிழர் கட்சி இருக்கும் வரை பா.ஜ.க. வராது. அதை நம்புகிற வீரர்கள் எனக்கு வாக்களியுங்கள் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 6ஆம் திகதி நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து தி.மு.க., அ.தி.மு.க., அ.ம.மு.க., மக்கள் நீதி மய்யம் உள்ளிட்ட கட்சிகள் தனித்தனியே கூட்டணி அமைத்துக் களம் காண்கின்றன. இதற்கிடையே நாம் தமிழர் கட்சி 234 தொகுதிகளிலும் தனித்துப் போட்டியிடுகிறது. அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் வேட்பாளர்களும் அனல் பறக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 4 சட்டப்பேரவைத் தொகுதிகளில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் ஜவஹர் (திருவாடானை), சசிகலா (பரமக்குடி), கண். இளங்கோ (ராமநாதபுரம்), ரஹ்மத் நிஷா (முதுகுளத்தூர்) ஆகியோருக்கு ஆதரவாக ராமநாதபுரம் அரண்மனை முன் அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பிரசாரம் செய்தார்.

அப்போது பேசிய அவர், "22 ஆண்டுகளைத் தி.மு.க.வுக்குக் கொடுத்துவிட்டீர்கள். 20 ஆண்டுகளை அதிமுகவுக்கும் கொடுத்துவிட்டீர்கள். விடுதலை பெற்ற இந்தியாவைக் காங்கிரஸ் 50 ஆண்டுகளுக்கும் மேல் ஆள அனுமதித்து விட்டீர்கள். அவர்கள் செய்த சகிக்க முடியாத ஊழல் மற்றும் லஞ்சத்தால்தான் பா.ஜ.க. என்னும் கட்சியே வந்தது. இல்லையென்றால் வந்திருக்காது.

கச்சதீவு மற்றும் காவிரி பிரச்னைகளில் காங்கிரஸும், பாஜகவும் ஒரே கருத்துடன்தான் செயல்படுகின்றன. மத்திய அரசு, நிறுவனங்கள் அனைத்தையும் தனியார் மயமாக்கி அதானி, அம்பானிகளிடம் பிரித்துக் கொடுத்துவிட்டது.

நானும் நாம் தமிழர் கட்சியும் இருக்கும் வரை தமிழகத்தில் பா.ஜ.க. வராது. அதை நம்புகிற வீரர்கள் எனக்கு வாக்களியுங்கள். இதைச் சொல்ல நான் பயப்படப் போவதில்லை. இந்த நிலத்தை என் இனத்தை, என்னைத் தாண்டித்தான் ஒருவர் தொட முடியும். இது சத்தியம்-என்றார்.

(அ)

# சூலத்துடன் சென்று வேட்புமனு தாக்கல்



சென்னை, மார்ச் 21

கையில் கருங்காலி கோல், சூலம் சகிதமாக புதுச் சேரி லாஸ்பேட்டை தொகுதியில் வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்தார் பாஜக மாநிலத் தலைவர் சாமிநாதன்.

கட்சி வேறுபாடு இல்லா மல் புதுச்சேரி அரசியல்வாதி கள் பலரும் ஜோதிடத்தில் அதீத நம்பிக்கை கொண்ட வர்கள். ஜோதிடர்களின் வாக்குப் படி பல நடைமுறைகளை நாள்தோறும் கடைபிடிப்பவர்கள். குறிப்பாக முன்னாள் முதல் வர் நாராயணசாமி சட்டப்பேரவை வளாகத்திற்கு, வெளியே செல்லும் வழியின் வழியாகதான் (Exit) காரில் உள்ளே வருவார். எதிர்க்கட்சித்தலைவர் ரங்கசாமி அப்பா பைத்தியசாமியை வழி படுவதுடன் சகுனம், நல்ல நாள், நேரம் பார்த்துதான் அனைத் துப் பணிகளிலும் ஈடுபடுவார். முன்னாள் அமைச்சர் நமச்சி வாயமும், சகுனம், ராசி, கோயிலில் வழிபட்டு தரப்படும் கயிறு கட்டிக்கொள்ளுதல் ஆகியவற்றில் அதீத நம்பிக்கையுடையவர்.

இதற்கு புதுச்சேரி பாஜக மாநிலத் தலைவர் சாமிநாதனும் விதிவிலக்கல்ல. வேட்பு மனுத்தாக்கல் செய்ய வந்த அவர், கையில் சிறிய அளவிலான கருங்காலி கோல், சிறிய சூலத்துடன் வந்தார். 'அதிர்ஷ்டம்' என அவர் நம்பும் கருங்காலி கோல் மற்றும் ஜீவ சமாதி ஒன்றில் பூஜை செய்து கொடுத்த சிறிய சூலம் அது என்று நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த கருங்காலி தடியை கையில் வைத்திருந்தால் திருஷ்டி, சூனியம், தோஷங்கள் விலகுமாம். ஜீவ சமாதியில் வைத்து வழிபட்ட சூலம் அனைத்திலும் வெற்றியைத் தேடித் தருமாம்.

# எம்மீது திட்டமிட்டு அவதூறுகள் பரப்பல்

### முதலமைச்சர் பழனிசாமி விசனம்

சென்னை, மார்ச் 21

மக்களை திசை திருப்புவதற்காக எம்மீது திட்டமிட்டு அவதூறுகள் பரப்பப்படுகின்றன என முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சுமத்தியுள்ளார்.

பெரம்பலூர் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

குறித்த தேர்தல் பிரசார கூட்டத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனி சாமி மேலும் கூறியுள்ளதாவது:

எங்களது ஆட்சியில், பொதுமக்களின் முறைப்பாடுகள் மீது உடனே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் மக்களுக்கு தேவையான சிறந்த செயற்றிட்டங்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம். இந்நிலையில் எமக்கு எதிரானவர்கள், எம்மீது அவதூறுகளை கூறி களங்கம் ஏற்படுத்த முனைகின்றனர் - என்றார்.

# இலங்கை - பங்களாதேஷ் இடையே 6 ஒப்பந்தங்கள் நேற்று கைச்சாத்து

டாக்கா,மார்ச்.21

இலங்கைக்கும், பங்களாதேஷுக்கும் இடையில் இரு தரப்பு பேச்சுவார்த்தை இரு நாட்டு பிரதமர்களின் தலைமையில் நேற்று டாக்கா நகரில் உள்ள பங்களாதேஷ் பிரதமரின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது பொருளாதாரம், முதலீடு,சந்தை, தொழிநுட்பம், விவசாயம், கடற்றொழில் கைத்தொழில் மற்றும் அரசியல் உறவு ஆகியவற்றை எவ்வாறு தொடர்ந்து முன்னெடுத்து செல்வது என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 50ஆவது வருட ஆரம்பத்தை முன்னிட்டு இரு நாடுகளுக்கும் இடையில் விரிவுபடுத்தப்பட்ட அரசியல் உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பிலான யோசனைகள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டன.

தீவிரவாதம் மற்றும் மனித கடத்தல் வியாபாரம் ஆகியவற்றை முழுமையாக இல்லாதொழிக்கத் தேவையான நடவடிக்கைகளை செயல்படுத்த இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்தன.

இருதரப்பு பேச்சுவார்த்தை நிறைவு பெற்றதன் பின்னர் இரு நாட்டு பிரதமர்களின் முன்னிலையில் இலங்கை - பங்களாதேஷ் இடையே ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இளைஞர் விவகாரத்தை அபிவிருத்தி செய்தல், விவசாயத்துறை,திறன் அபிவிருத்தி பரிமாற்றல், சுகாதார தாதிகள் சேவை பரிமாற்றம், அனைத்து துலக ஒத்துழைப்பு கல்வி மற்றும் 2021-2025 வரையிலான அனைத்து கலாசார பரிமாற்றம் செயல்திட்டம் ஆகிய விடயங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

(எ)

# மலையக மக்கள் முன்னணியின் நிலைமையோ கவலைக்கிடம்

## அனுசா சந்திரசேகரன் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 21

மலையக மக்கள் முன்னணி என்ற அமைப்பின் தூண்களாகிய மக்கள், சந்திரசேகரன் மக்கள் முன்னணியினுடனேயே இருக்கிறார்கள். எனவே, இனி வரும் காலங்களில் மக்களை பற்றி சிந்திக்கும், மக்களுக்காக சேவை செய்யும் அமைப்பாக சந்திரசேகரன் மக்கள் முன்னணியே இயங்கும் என சந்திரசேகரன் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

அதுதொடர்பாகக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

"மேலும் ஆண்டாண்டு காலமாக அடிமைப்படுத்தப்பட்ட எம் மக்கள் அடிமைத் தனத்திலிருந்து விடுபட்டு அரசியல் சமூக மாற்றங்களை எதிர்ப்பார்த்து 1990ம் ஆண்டுகளில் அமரர் சந்திரசேகரனுடன் இணைந்து மலையக மக்கள் முன்னணியை உருவாக்கியது இன்றைய தலைமையில் இருக்கும் வியாபாரிகளின் வங்கிக்கணக்குகளையும் சொத்துக்களையும் அதிகரித்துக்கொள்வதற்கு அல்ல. மக்களின் நலனை முன்னிறுத்தியே அன்றைய முன்னணி செயற்பட்டது.

ஆனால் மலையக மக்கள் முன்னணியின் இன்றைய நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. உள்ளார்ந்த பழிவாங்கல்கள் பதவி பேராசைகள் இப்படியே போனால் கடைசியில் கட்சியில் எவருமே எஞ்சமாட்டார்கள் போலும்.

ஆகவே எம் மலையகத்துக்கு சேவை செய்ய எண்ணும் அனைத்து இளைஞர் ,யுவதிகள், புத்திஜீவிகள், ஆரம்பகால உறுப்பினர்கள் என அனைவருக்கும் இணைந்து செயற்பட சந்திரசேகரன் மக்கள் முன்னணி வாய்ப்பளிக்கும் ." எனவும் அனுசா தெரிவித்தார்.

# அரசாங்கத்துக்கு எதிராக சிலர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்!

## ஜனாதிபதி கோட்டாபய கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 21

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் வேலைத் திட்டங்களுக்கு எதிராக சிலர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கிராமத்துடன் உரையாடல் வேலைத் திட்டத்தின் 15ஆவது திட்டம் நேற்று வலப்பனை பகுதியில் இடம்பெற்றது.

# மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்யத் திட்டம்

கொழும்பு, மார்ச் 21

மது போதையில் மற்றும் முறையற்ற விதத்தில் வாகனம் செலுத்துபவர்களை கைது செய்வதற்கான விசேட சுற்றிவளைப்புகள் நேற்று முதல் ஒரு மாதத்துக்கு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பதுளை - பசறையில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் கருத்து தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், மோட்டார் வாகனப் பரிசோதர்களை பயன்படுத்தி விபத்திற்குள்ளான பேருந்தின் தொழில்நுட்பம் தொடர்பில் பரிசோதிக்க எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

# ரெலோவின் அலுவலகம் முல்லைத்தீவில் திறப்பு

முல்லைத்தீவு, மார்ச் 21

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முல்லைத்தீவு மாவட்ட அலுவலக திறப்பு விழா நேற்று மாலை 2 மணியளவில் புதுக்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், கோவிந்தன் கருணாகரம் மற்றும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு கட்சி அலுவலகத்தின் பெயர்ப்பலகை திரைநீக்கத்தை தொடர்ந்து கட்சியின் கட்டடத்தை நாடா வெட்டி திறந்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலை இயக்கத்தின் பொதுக்குழு கூட்டம் இடம்பெற்றது.

(அ)



# முன் அறிவிப்பின்றி நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த பொலிஸாரின் தலைமையில் இராணுவத்தினரால் விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் குற்றவாளிகள் தலைமறைவாக இருப்பதாக நம்பப்படும் நிலையில் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்பான திகதி அறிவிக்கப்பட்டால் குற்றவாளிகள் தலைமறைவாக வாய்ப்பாகிவிடும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே பகல் மற்றும் இரவு வேளைகளில் குறித்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் கூறியுள்ளார்.

# வரணி பகுதியில் விபத்து; வாகனச் சாரதி படுகாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

வரணிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வீதித் திருத்தல் பணியில் ஈடுபட்டுவரும் வாகனம் ஒன்றின் சாரதி ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

கொடிகாமத்திலிருந்து முள்ளிநோக்கிய திசையில் பயணித்த வாகனம் திடீரென வீதியின் ஓரத்தில் நின்றிருந்த மோட்டார் சைக்கிளை மோதி விற்பனை நிலையம் ஒன்றை மோதி காணி ஒன்றுக்குள் சென்று பனை மரத்தில் மோதி நின்றது.

சம்பவத்தில் வாகனத்தினைச் செலுத்திச் சென்ற சாரதி படுகாயம் அடைந்துள்ளார்.

அவர் மீட்கப்பட்டு வரணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு மாற்றப்பட்டார்.

வாகனத்தின் பாகம் ஒன்று உடைந்தமையே விபத்துக்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# கைத்துப்பாக்கியுடன் சந்தேக நபர் கைது!

கொழும்பு, மார்ச் 21

ஊறுகொடவத்தை சுங்கப் பயணப் பொதிகள் களஞ்சியசாலையில் ஜப்பானிலிருந்து அனுப்பப்பட்டிருந்த பையொன்றில் இருந்து கைத்துப்பாக்கி ஒன்றும், 6 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுங்கப் பணிப்பாளர் நாயகம் விஜித ரவிப்பிரிய இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் தற்போது மேலதிக விசாரணைகளுக்காக தெமட்டகொடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# 239 பேர் குணமடைவு

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று மேலும் 239 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளானவர்களில் 86,466 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 544 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# அரசை ஆட்சிபீடம் ஏற்றியமைக்காக வெட்கப்படுகிறார்கள் நாட்டு மக்கள்

## கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 21

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றிய மக்கள், தற்போது அதனை எண்ணி வெட்கப்படுகின்றனரென முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆட்சிபீடம் ஏறுவதற்கு காரணமாக இருந்த 69 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள், தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாட்டை பார்த்து வெட்கப்படுகின்றார்கள்.

அதாவது எந்த அச்சமும் இல்லாமல் பட்ட பகலில் நடந்த பல பெரிய மோசடிகளைப் பற்றி முழு நாடும் பேசுகிறது.

மேலும் சீனி இறக்குமதியின்போது இடம்பெற்றுள்ள பாரிய கொள்ளைக்கு அரசாங்கம் பதிலளிக்க மறுக்க முடியாது.

நாட்டில் பதிவான மிக மோசமான மோசடி என்று கருதப்படும் சீனி வரி மோசடி உட்பட அனைத்து பெரிய அளவிலான மோசடிகளில் ஈடுபட்ட அனைவரையும் ஜனாதிபதி, சட்டத்திற்கு முன் கொண்டுவர வேண்டும்-என்றார்.



## கிளிநொச்சியில் மினி சூறாவளி!

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் கனமழையுடன் வீசிய மினி சூறாவளியினால் ஐந்து வீடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஆனந்தபுரம் கிழக்கு பகுதியில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரண்டு தற்காலிக வீடுகள் முழுமையாகவும் மூன்று நிரந்தர வீடுகள் பகுதியளவிலும் சேதம் அடைந்துள்ளது.

சம்பவத்தை அடுத்து கரைச்சி பிரதேச செயலகத்தின் கவனத் துக்கு குறித்த விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## அபிவிருத்தியை குழப்புவதற்காகவே பொத்துவில் - பொலிகண்டி இயக்கம்

### பிள்ளையான் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, மார்ச் 21

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை இயக்கத்தினர் போன்றவர்களைக் கொண்டு மட்டக்களப்பில் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் குழப்பும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமைதியான நிலைமை இருந்து சகல துறைகளும் சீராக இயங்கும்போதே தொழிற்சாலைகளை மாவட்டத்திற்குக் கொண்டுவர முடியும் என அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்பிருந்த அரசாங்கம் வேலைத் திட்டத்தினை முன்மொழியுமே தவிர அது நடைபெறுகின்றதா என்பதை அவதானிக்காது. ஆனால், இந்த அரசாங்கம் சரியான நிர்வாகத் திட்டமிடலுடன் குழுக்களை அமைத்துத் திட்டங்களைக் கண்காணித்து வருகிறது.- என்றார்.

## காணாமற்போன மாணவனை தேடும் நடவடிக்கைகள் தீவிரம்!

கொழும்பு, மார்ச் 21

இரத்மலானையில் காணாமல் போன பாடசாலை மாணவனை தேடும் பணி மும்முரம் படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்காக நான்கு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பம்பலப்பிட்டி- புனித அந்தோனியார் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இரத்மலானை-தஹம் மாவத்தையில் வசிக்கும் எல்டன் டெவொன் கெனி எனும் 16 வயதுடைய மாணவனே காணாமல் போனவராவார்.

இந்த மாணவன், கடந்த 18ஆம் திகதி காலை வீட்டைவிட்டு வெளியேறியுள்ளதுடன், இன்னும் வீடு திரும்பவில்லை என மாணவனின் தாயார் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் காலை 6.30 மணியளவில், மாணவன் சாதாரண ஆடையில் மொறட்டுவை நோக்கிப் பயணிக்கும் காட்சிகள் சி.சி.ரி.வியில் பதிவாகியுள்ளன.

மாணவன் தொடர்பாக ஏதேனும் தகவல் கிடைத்தால் 077 377 9850 என்ற இலக்கத்துக்கு அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## காடழிப்புக்கு எதிராக செவ்வாய் கொழும்பில் பெரும் போராட்டம்

### ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 21

**காடழிப்புகளை நிறுத்துமாறும், சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக விசேட பொறிமுறையொன்றை உருவாக்குமாறு வலியுறுத்தியும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மாபெரும் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.**

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளது.

அதேவேளை, காடழிப்பு உட்பட சுற்றாடலுக்கு இழைக்கப்படும் தீங்குகள் தொடர்பில் ஆராய்வதற்கும், அதன்பின் புலத்தில் உள்ள அரசியல் கரங்களை அம்பலப்படுத்துவதற்கும் ஐக்கிய மக்கள் சக்தி ஐவரடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான நளின் பண்டார, புத்திக பத்திரண, காவிந்த ஜயவர்தன, மயந்த திஸாநாயக்க உள்ளிட்டோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

(அ)

## வடக்கில் அரச உத்தியோகத்தர்கள் பலர் ஊடகத்துறையில் பணிபுரிகிறார்களாம்!

### கெஹெலியவுக்கு சொன்னார் ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

அரச உத்தியோகத்தர்கள் பலர் அவர்களின் திணைக்களத் தலைவர்களின் அனுமதியின்றி ஊடகத்துறையில் பணிபுரிவதாகவும், குறித்த ஊடக நிறுவனங்கள், ஊடக அமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி தான் அறிந்திருக்கவில்லை என்றும் வடக்கு மாகாண ஆளுநர், ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல முன்னிலையில் தெரிவித்தார்.



ஊடக அமைச்சின் கீழ் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையத்தின் செயற்பாடுகளை விரிவுபடுத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடல் வெகுசன ஊடகத்துறை அமைச்சர கெஹெலிய ரம்புக்வெல பங்குபற்றுதலுடன் வடமாகாண ஆளுநர் பீ. எஸ். எம் சார்ள்ஸின் தலைமையில் வடமாகாண ஆளுநர் கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் முற்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையத்தின் பணிப்பாளர், கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக விளக்கமளித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த ஆளுநர், ஒரு நாட்டின் அபிவிருத்தி செயற்பாட்டின் முக்கிய தூணாக விளங்கும் ஊடகத்துறையினர் சரியான தகவல்களை முறையான வழிமுறையூடாக உடனுக்குடன் மக்களுக்கு தெரியப்படுத்தல் அவசியமானதென குறிப்பிட்டார்.

ஆனால் தற்போது அரசாங்கத்தினால் வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான தகவல்கள் அரச தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்றவற்றில் பிரசுரிக்கப்படுவதில்லை எனவும் பல்வேறுபட்ட செய்திகள் முன்னுக்குப் பின் முரணாக திரிவுபடுத்தி பிரசுரிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

சமூக வலைத்தளங்களில் தவறான மற்றும் வதந்திச் செய்திகள் விரைவாக பகிரப்படுவதாகவும் அதனால் வெளிமுதலீட்டாளர்கள் பலர் தமது முதலீடுகளை இலங்கையில் முதலிட தாமதப்படுத்துவதாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்கள் பலர் அவர்களின் திணைக்களத் தலைவர்களின் அனுமதியின்றி ஊடகத்துறையில் பணிபுரிவதாகவும், குறித்த ஊடக நிறுவனங்கள், ஊடக அமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி தான் அறிந்திருக்கவில்லை என்றும் கூறினார்.

அரசாங்கத்தின் வடக்கு மாகாணத்துக்குரிய அபிவிருத்தி தொடர்பான தகவல்கள் அரச ஊடகங்களால் கூடப் பிரசுரிக்கப்படுவதில்லை என பல தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்கு பதிலளித்த ஊடகத்துறை அமைச்சர் அவ்விடயம் தொடர்பில் தான் உடனடியாக நடவடிக்கை எடுப்பததாகக் கூறினார்.

(அ)

## மலையக மக்கள் முன்னணியிலிருந்து வெளியேற்றப்பட்டார் அரவிந்தகுமார்!

கொழும்பு, மார்ச் 21

மலையக மக்கள் முன்னணியின் உறுப்புரிமையில் இருந்தும், அனைத்துப் பதவிகளில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார் நீக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை கட்சியின் செயலாளர் நாயகம் சங்கரன் விஜயசந்திரன் உறுதிப்படுத்தினார்.

மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று முன்னணியின் பிரதான காரியாலய மண்டபத்தில் முன்னணியின் தலைவர் வீ. இராதாகிருஷ்ணன் எம்.பி. தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மலையக மக்கள் முன்னணியின் மத்திய செயற்குழுவில் மொத்தமாக 82 உறுப்பினர்கள் அங்கம் வகித்த போதிலும் 64 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது கலந்துரையாடப்பட்ட, எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

01. பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அ.அரவிந்குமார் கட்சியின் கொள்கையை மீறி அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தமை கட்சியின் கொள்கையை மீறும் செயலாகக் கருதப்பட்டது.

02. பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்குமாரிடம் விளக்கம் கோரப்பட்டது. அந்த விளக்கம் திருப்தியளிக்கவில்லை என்ற கவுன்சில் தீர்மானத்தை மத்திய செயற்குழு ஏற்றுக்கொண்டது.

03. அ.அரவிந்குமார் மலையக மக்கள் முன்னணி மற்றும் மலையக தொழிலாளர் முன்னணியில் வகித்த பதவிகள் மற்றும் அங்கத்துவ உறுப்புரிமை என்பன இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில் அவர் தலைமைக் காரியாலயத்துக்கு அத்துமீறி அலுவலகப் பணியில் ஈடுபட்டமை மத்திய செயற்குழு மற்றும் கவுன்சிலின் தீர்மானத்தை மீறியதாக மத்திய செயற்குழு தீர்மானித்தது.

04. இதன் அடிப்படையில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்குமார் மலையக மக்கள் முன்னணியின் உறுப்புரிமையிலிருந்தும் மற்றும் மலையக மக்கள் முன்னணி, மலையகத் தொழிலாளர் முன்னணியில் வகித்த பதவிகள் உடன் நடைமுறைப்படுத்தும் வகையில் நீக்கப்பட்டன எனவும் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டபோது பதுளையைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற 9 உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளியேறிய நிலையில் ஏனைய அனைவருடைய ஏகோபித்த ஆதரவுடன் மேற்படி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன எனவும் ஊடக அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தாண்டை முன்னிட்டு புதிய சுகாதார வழிகாட்டல்!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

**எதிர்வரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு புதிய சுகாதார வழிகாட்டல்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**



கொரோனா வைரஸின் தாக்கத்தில் மாற்றங்கள் ஏற்பட்டால் சுகாதார வழிகாட்டல்களில் மீண்டும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தற்போது நாட்டில் சுகாதார வழிகாட்டுதல்கள் தளர்த்தப்பட்டுள்ள போதிலும், மக்கள் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவில்லை எனின் சட்டங்கள் மீண்டும் கடுமையாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப்பகுதிகளில் சுகாதார வழிகாட்டிகளை உரிய வகையில் கடைப்பிடிப்பது மிகவும் முக்கியமானது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவான வர்த்தமானி அறிவிப்பு விதிமுறைகள் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரை காலப்பகுதியில் சுகாதார வழிகாட்டல்களை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 363 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புத்தாண்டு காலப்பகுதியில் தொற்று பரவல் அதிகரிக்கும்

கொழும்பு, மார்ச் 21

சித்திரைப் புத்தாண்டு காலப் பகுதியில், கொவிட் தொற்று பரவல் அபாயம், அதிகரிக்கக் கூடும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதன் காரணமாக, நாடுமுழுவதும் உள்ள வர்த்தக நகரங்களிலும், சனநெரிசல் மிக்க பகுதிகளிலும் எழுமாறாக பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த சங்கத்தின் செயலாளர் மஹேந்ர பாலசூரிய வலியுறுத்தியுள்ளார்.

நோய் அறிகுறிகளை வெளிப்படுத்தாத நோயாளர்கள், குறித்த இடங்களுக்கு செல்வதனால், ஏனையவர்களுக்கும் தொற்று பரவக்கூடிய அபாயம் உள்ளதாகவும் அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

எவ்வாறிருப்பினும், நோய் அறிகுறிகளுடன் கூடிய நோயாளர்களின் எண்ணிக்கையில் ஓரளவு வீழ்ச்சித் தன்மை உள்ளதாக அதிகாரிகளின் மூலம் கிடைக்கும் தகவல்களில் அறியக்கூடியதாக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ரவிக்கு தொற்றில்லை

கொழும்பு, மார்ச் 21

மத்திய வங்கி மோசடி தொடர்பாக கைது செய்யப்பட்ட முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 09 பேருக்கும் கொரோனா தொற்றில்லை என உறுதியாகியுள்ளது.

2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற பத்திர மோசடி குறித்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த எண்மர் மீது பி.சி.ஆர். பரிசோதனை நடத்தப்பட்டது.

இந்நிலையில் அவர்களுக்கு தொற்று இல்லை என உறுதியாகியுள்ள நிலையில் அவர்கள் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைப் பேச்சாளர் சந்தன எக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரவி கருணநாயக்க மற்றும் 8 பேருக்கு 23 ஆம் திகதி வரை விளக்கமறியலை நீடித்து கொழும்பு மேல் நீதிமன்ற அமர்வு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலகில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் இலங்கை முன்னேற்றம்!

கொழும்பு, மார்ச் 21

உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் இலங்கை 129ஆவது இடத்தில் உள்ளது. இந்த பட்டியலில் பின்லாந்து முதலிடத்தில் உள்ளது.

உலகில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல், ஐ.நா. நிலையான அபிவிருத்தித் தீர்வுகள் வலையமைப்பு மூலம் வெளியிடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான பட்டியல் தற்போது வெளியாகியுள்ளது.

தனிநபர் சுதந்திரம், மொத்த உள்நாட்டு உற்பத்தி, ஊழல், சமூக ஆதரவு உள்ளிட்ட பல வேறு அம்சங்களின் அடிப்படையில், 149 நாடுகள் மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த பட்டியலின்படி, உலகின் மகிழ்ச்சியான நாடாக பின்லாந்து முதலிடம் பிடித்துள்ளது. அதற்கு அடுத்த ஒன்பது இடங்களில் முறையே டென்மார்க், சுவிட்சர்லாந்து, ஐஸ்லாந்து, நெதர்லாந்து, நோர்வே, ஸ்வீடன், லக்சம்பேர்க், நியூசிலாந்து, ஒஸ்திரியா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

கடந்த வருடம் 130ஆவது இடத்திலிருந்த இலங்கை இந்த வருடம் ஒரு இடம் முன்னேறி, 129ஆவது இடத்தை பிடித்துள்ளது.

முதல் 10 இடங்களில் ஐரோப்பா அல்லாத நாடாக நியூசிலாந்து இடம்பெற்றுள்ளது. இந்த பட்டியலில் 13 ஆவது இடத்திலிருந்து பிரித்தானியா 17ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

பல ஆசிய நாடுகள் கடந்த ஆண்டு தரவரிசையில் இருந்ததை விட முன்னேற்றம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 94வது இடத்திலிருந்த சீனா 84ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்தப் பட்டியலில் உலகில் மிகவும் மகிழ்ச்சியற்ற நாடுகளாக ஆப்கானிஸ்தான், அதைத் தொடர்ந்து லெசோதோ, பொட்ஸ்வானா, ருவாண்டா மற்றும் சிம்பாவே ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

## புனர்வாழ்வளித்தல் வர்த்தமானி வெளியீடு சிறுபான்மையினரை வலுவிழக்கச்செய்யும்

### மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச்21

அரசாங்கத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட புனர்வாழ்வளித்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன, மத ரீதியான சிறுபான்மைச் சமூகத்தின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் வலுவிழக்கச்செய்யும் வகையில் அமைந்துள்ளது என மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒவ்வொரு பிரஜையினதும், குறிப்பாக இன, மத ரீதியான சிறுபான்மைச் சமூகத்தின் உரிமைகளையும், சுதந்திரத்தையும் வலுவிழக்கச்செய்யும் வகையிலேயே அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி வழிகாட்டல்கள் அமைந்துள்ளன. அத்தோடு மேற்படி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் ஊடாக நீதித்துறையின் அதிகாரங்கள் சில நிறைவேற்று அதிகாரத்திடம் கையளிக்கப்படல் உள்ளடங்கலாக அதிகாரங்களை வழங்குவதில் மீறல்கள் இடம்பெற்றிருக்கின்றன. அத்தோடு மிகவும் மோசமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் அதற்கான கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கும் எடுக்கப்படும் முயற்சிகள் இலங்கையின் அரசமைப்புக்கு முரணானதாகும். மேலும் இந்த வழிகாட்டல்கள் சிவில் சமூகத்தின் சுதந்திரத்தின் மீதும் சட்டத்தின் ஆட்சி மீதும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

அதேவேளை, இந்த மேலோட்டமான வழிகாட்டல்கள் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும் அபாயத்தைக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக புனர்வாழ்வளித்தல் என்பதால் கருதப்படுவது என்ன? என்பது குறித்து இங்கு தெளிவாக விளக்கமளிக்கப்படவில்லை. அதேபோன்று புனர்வாழ்வளிக்கும் நிலையங்களால் எத்தகைய செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடப்படவில்லை என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ)

## பெற்றுக்கொள்ளும் இரு தடுப்பூசிகளும் ஒரே வகையானதாக இருக்கவேண்டும்!

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

நாட்டில் ஒருவர் முதலாவதாக பெற்றுக்கொண்ட தடுப்பூசி வகையினையே இரண்டாவது முறையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஏனெனில் வெவ்வேறு தடுப்பூசிகளின் செயற்பாடுகள் வெவ்வேறு வழிகளில் செயற்படுவதாக கொரோனா கட்டுப்பட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் ஒருவர் முதலாவதாக பெற்றுக்கொண்ட தடுப்பூசியையே அவர்களுக்கு இரண்டாவது முறையாகவும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தடுப்பூசியின் முதல் டோஸ் வைரஸின் பரவலை 64 வீதம் கட்டுப்படுத்தும் நிலையில் இரண்டாவது டோஸ் 10 முதல் 12 வாரங்களுக்குப் பிறகு வழங்கப்படுகிறது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் ஜனவரி 29 ஆம் திகதி கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றுக்கொண்டவர்களுக்கு ஏப்ரல் 29 ஆம் திகதி இரண்டாவது டோஸை வழங்குவதற்குரிய தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.



இதற்கிடையில், தடுப்பூசியின் முதல் அளவைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்கான உரிய திகதியை அதிகாரிகள் அறிவிக்கும்போது அதனைத் தவறவிடக்கூடாது என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே கேட்டுக்கொண்டார்.

## பரசூட் பயிற்சி விபத்தில் விமானப்படை வீரர் பலி!

கொழும்பு, மார்ச் 21

அம்பாறை, உகண பகுதியில் விமானப்படையினரின் பரசூட் பயிற்சியின் போது விமானப்படை வீரர் ஒருவர் உயிரிழந்தார். மேலுமொருவர் காயமடைந்துள்ளார்.

பயிற்சியின்போது எதிர்பாராத காற்று மாற்றம் காரணமாக இரண்டு பரசூட்டுகள் நடுவானில் மோதிக் கொண்டதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது என்று விமானப்படை செய்தித் தொடர்பாளர் விங் கொமாண்டர் துஷன் விஜேசிங்க தெரிவித்தார்.

"இன்று (நேற்று) காலை பயிற்சியின் போது, வீரர்கள் பரசூட்டிலிருந்து தரையிறங்குகையில், காற்றின் திசை திடீரென மாறியது. இரண்டு பரசூட்கள் மோதிக் கொண்டதில் காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர், ஆனால் பின்னர் ஒருவர் உயிரிழந்தார்" என அவர் தெரிவித்தார்.



# மனித உரிமை பேரவை தீர்மானத்திற்கு உலக தமிழர் பேரவை வரவேற்பு!

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் மார்ச் 16 ஆம் திகதி இலங்கை குறித்த முகன்மை குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய தீர்மானத்தை உலக தமிழர் பேரவை வரவேற்கின்றது.

உறுப்பு நாடுகளை இந்த தீர்மானத்திற்கு ஆதரவளிக்குமாறும் உறுப்பினர்கள் இல்லாத நாடுகளை இணை அனுசரணை வழங்குமாறும் உலக தமிழர் பேரவை கேட்டுக்கொள்கின்றது.

இது மனித உரிமைகளும் பொறுப்புக்கூறலும் சர்வதேச நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்தும் நீடிப்பதை உறுதி செய்யும் என தெரிவித்துள்ள உலக தமிழர் பேரவை இலங்கையில் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கைகள் தீடிரென அணைக்கப்படாது எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் தமிழ் சமூகம் யுத்தத்தின் போது பெரும் துன்பங்களை சந்தித்தது என தெரிவித்துள்ள உலக தமிழர் பேரவை, 12 வருடங்கள் கடந்த பின்னரும் பொறுப்புக்கூறலும் நீதியும் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

தங்கள்அன்புக்குரியவர்கள் குறித்த கேள்விகளிற்கு பதிலை கோரும் ஏனைய சமூகத்தவர்களும் உள்ளனர் என உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் நீதியும் உரிய நடைமுறையும் மறுக்கப்பட்ட அனைவருக்கும் சர்வதேச சமூகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் தான் முன்னெடுத்துள்ள ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் நம்பிக்கையை அளித்துள்ளது என உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

தற்போது இலங்கை ஐக்கியநாடுகள்மனித உரிமை பேரவையின் தீர்மானத்திலிருந்து விலகியதுடன் சிறிதளவு முன்னேற்த்தை கூட காணபிக்கவில்லைஎன குறிப்பிட்டுள்ள உலக தமிழர் பேரவை அதேவேளை இலங்கையின் பிரச்னைகள் இரட்டிப்பாகியுள்ளன என குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் ஆட்சிமுறை மனித உரிமைகள் மற்றும் பிரஜைகள் அனுபவிக்கும் சுதந்திரம் ஆகியன கடந்த 12 முதல் 18மாதங்களில் பாரிய மாற்றங்களை சந்தித்துள்ளன என உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

சிறுபான்மையினத்தவர்கள் குறிப்பாக தமிழர்களும் முஸ்லீம்களும் திட்டமிடப்பட்ட விதத்தில் ஓரங்கப்பட்டப்படுகின்றனர் என தெரிவித்துள்ள உலக தமிழர் பேரவை தங்கள் நாட்டிலேயே அவர்கள் இரண்டாம் தரபிரஜைகளாக நடத்தப்படுகின்றனர் என தெரிவித்துள்ளது.

உடல்களை பலவந்தமாக தகனம் செய்தல் மற்றும் தற்போது புர்கா தடைகாரணமாக முஸ்லிம்கள் துயரங்கள் இதற்கான சிறந்த உதாரணம் என உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

அனைத்து பல்தரப்பு மற்றும் இருதரப்பு அமைப்புகளில் சாத்தியக்கூறுகளை ஆராயும் அதேவேளை ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவையின் இந்த அமர்வு மிகவும் முக்கியமானது என தெரிவித்துள்ள உலக தமிழர் பேரவை இதில் ஏற்படும்எந்த தோல்வியும் இலங்கையை ஒரேயொரு பல்நாட்டு அமைப்பான மனித உரிமை பேரவையிலிருந்து இலங்கையை வெளியேற்றி விடும் எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த 12 வருடங்களாக பொறுப்புக்கூறலிற்காகவும் நீதிக்காகவும் துணிச்சலுடன் போராடும் காத்திருக்கும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு இது பாரிய அடியாக அமையும் எனவும் உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இது ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் செயல்திறன் இன்மையையும் ( ஐநாவினதும்) வெளிப்படுத்தி சர்வாதிகாரிகளும் கொடுங்கோலர்களும் தங்கள் நடவடிக்கைகளிற்கான தண்டனையை அனுபவிக்காமல் தப்பமுடியும் என்ற முன்னுதாரணத்தை உருவாக்கும் எனவும் உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

கடும் குற்றச்சாட்டுகளிற்கு உள்ளான மனித உரிமை ஆணையகத்திற்கு பதில் 15 வருடங்களிற்கு முன்னர் உருவாக்கப்பட்ட மனித உரிமை பேரவை தோல்வியடையாததும்,உலகம் முழுவதும் மனிதஉரிமை மீறல்களிற்கு உட்படுத்தப்பட்ட மக்களின் குரலாக தொடர்ந்து விளங்குவதும் முக்கியமானதாகும் என உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

இந்த சூழமைவின் அடிப்படையிலேயே பிரிட்டன் தலைமையிலான முகன்மை குழு தனது தீர்மானத்தை சமர்ப்பித்துள்ளது என தெரிவித்துள்ள உலக தமிழர் பேரவை தமிழ் சமூகத்தின் பலர் இந்த தீர்மானம் காரணமாக ஏமாற்றமடைந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளது.

ஐக்கியநாடுகள் மனிதஉரிமை ஆணையாளரின்அறிக்கையின் தீவிர தன்மை இந்ததீர்மானத்தில் பிரதிபலிக்கவில்லை என அவர்கள்கருதுவதாகவும் தெரிவித்துள்ளது.

நீதிக்கான பொறுப்புகூறலிற்கான தங்களது நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அறியப்படாத தொலைதூரத்திற்கு மீண்டும் தாமதமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள்கருதுகின்றனர் என உலக தமிழர் பேரவை தெரிவித்த்துளது

எங்கள் சமூகத்தில் காணப்படுகின்ற நியாயமான கரிசனைகளை ஏமாற்றங்களை அடையாளம் காணும் அங்கீகரிக்கும் அதேவேளை, தீர்மானத்தின் உள்ளடக்கம் மற்றும் தொனியில் உள்ள காரணங்களையும் புரிந்துகொள் முயன்றுள்ளதாக உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் உணர்வுகளை முழுமையாக உள்வாங்கி ஐக்கியநாடுகள்மனித உரிமை ஆணையாளரின் அனைத்து பரிந்துரைகளையும் ஐக்கியநாடுகள்மனித உரிமை பேரவையில் வெற்றி பெறக்கூடிய தீர்மானமாக மாற்றுவது சாத்தியமற்ற விடயம் எனவும் உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.


இது பல அரசியல்பின்னடைவுகளையும் ஆபத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது என தெரிவித்துள்ள உலக தமிழர் பேரவை இந்த சூழமைவிலேயே ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான முதன்மை குழு ஆற்றிய சீரான திறமையான பங்களிப்பை நாங்கள் பாராட்டுகின்றோம் இந்த முக்கியமான பிரச்னையில் அவர்களின் தலையீட்டிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களா கயிருக்கின்றோம் எனவும் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை ஏதேச்சதிகார இராணுவமயப்படுத்தப்பட்ட பிரத்தியோகமாக பெரும்பான்மை சமூக நாடாக மாறுவதற்கான அனைத்து அறிகுறிகளும் தென்படும் நிலையில் இலங்கையை சர்வதேச நிகழ்ச்சி நிரலில்உறுதியாக வைத்திருந்து உரிய சந்தர்ப்பங்களில் நீதியை வழங்குவதற்கு முறையாக தயாராகுதல் அவசியம் எனவும் உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

செய்தியின் பின்னணியில்.....

# ஜெனிவா வாக்கெடுப்பு: ஆச்சரியத்தின் அந்தரங்கம்!





ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான பிரேரணை நாளைய தினம் வாக்கெடுப்புக்கு வருகிறது. இலங்கையில் மீறப்பட்டதாக சொல்லப்படும் மனித உரிமைகள் தொடர்பிலான விவகாரத்தை இலங்கையின் இறைமை தொடர்பிலான விவகாரமாக்க இலங்கை அரசு இதில் முயல்கிறது.

பிரிட்டன் கொணரும் இப் பிரேரணைக்கு ஆதரவாக போதிய அளவிலான நாடுகளின் ஆதரவு இருப்பதாகவே அறியப்பட்டாலும், வாக்கெடுப்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பது அநுசரணை நாடுகளுக்கும் இலங்கைக்கும் மாத்திரமல்ல, அரசியல் அவதானிகளுக்கும் ஆர்வம் நிறைக்கின்றதொன்றாகிறது. இரு தரப்புகளும், தமக்கான ஆதரவுக்கு இந்தியாவை அணுகினாலும், இந்தியா தனது நிலைப்பாட்டை இன்னமும் வெளிப்படுத்தவில்லை.

இவ் விவகாரத்தில், வாக்கெடுப்பின்போது எத் தரப்புக்கும் வாக்களிக்காமல் இருப்பதே இந்தியாவின் முடிவாகலாம் என்பது பொதுவான யூகம். ஆனாலும், இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, பிரேரணையை எதிர்த்து, இந்தியா தமக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்ற நம்பிக்கையை கடைசிவரையிலும் தெரிவிக்கிறார். இது ஓர் இராஜதந்திர நடைமுறை. ஆனால், இலங்கையின் இறைமையையும், பிராந்திய நட்பையும் இந்தியாவின் ஆதரவுக்காக தினேஷ் குணவர்த்தன வற்புறுத்துகிறார்.

“இறைமை“ என்பது பலவிதமாக வியாக்கியானப்படுத்தப்படுவது. எனினும், ஒரு நாட்டின் இறைமை கேள்விக்குட் படுத்தப்படலாகாது என்பது நியாயமானது. ஓர் அரசு கொண்டிருக்கவேண்டிய, பிறர் தலையீடு அற்ற, மேலான அதிகாரம் இறைமை என்று கொள்ளப்படுவதுண்டு. ஆனால், ஒரு நாட்டின் இறைமை அந் நாட்டு மக்களுடையது. அது, மக்களுக்குரியதாக இருப்பது ஜனநாயகத்தின் அடிப்படை.

ஆக, வாக்கெடுப்புக்கான விவகாரம், இலங்கையின் ஒரு தனித் தேசிய இனமான தமிழர்களின் மனித உரிமைகள் சார்ந்ததாகையில், இலங்கையின் இறைமையும்கூட இதில் கேள்விக்குள்ளாவதாக தெரிகையில், இறைமையின் பாதுகாப்புக்கான அமைச்சரின் கோரிக்கை வலுவானதாகுமா?

எப்படியெனினும், இந்தியாவின் நிலைப்பாடு கடைசி நிமிடம்வரை, எந்த ஆச்சரியத்தையுமே ஏற்படுத்தவல்ல அந்தரங்கம்தான்.

1977இல், ஜே. ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தில் மூன்று தமிழ் அமைச்சர்கள் இருந்தார்கள். கே. டபிள்யூ. தேவநாயகம், எஸ். தொண்டமான், செ. இராசதுரை. இவர்கள் தவிர, மூன்று முஸ்லிம் அமைச்சர்களும் இருந்தார்கள். ஏ. சி. எஸ். ஹமீட், எம். எச். எம். நைனா மரிக்கார், எம். எச். முஹமட்.

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. விவாதத்துக்கு முதல், அரசாங்க பாராளுமன்ற குழு கூட்டத்தில் பிரதி நீதி அமைச்சர் ஷெல்ரன் ரணராஜா, ஜனநாயக பண்புக்கு முரணான இப் பிரேரணையை கைவிடுமாறும் அல்லாவிட்டால், வாக்கெடுப்பில் இதனை எதிர்த்து வாக்களிப்பதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை என்றும் தெரிவித்தார். மனசாட்சிக்கு கஷ்டமாகவிருந்தால் வாக்களிப்பில் பங்குபற்றாதிருங்கள் அல்லது வாக்களிப்பு நேரம் சபையில் இல்லாமலிருங்கள் என்று ஜே. ஆர். ஆலோசனை கூறினார். உங்கள் நிலைப்பாட்டிலேயே அமைச்சர் தொண்டமானும் இருக்கிறார். ஆனால், வாக்கெடுப்பில் பங்குபற்றுவதில்லை என்று அவர் தீர்மானித்திருக்கிறார் என்றும் ஜே. ஆர். கூறினார்.

விவாதத்தின்போது எதிர்க்கட்சியினர் எவருமே சபையில் இருக்கவில்லை. அமிர்தலிங்கமும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சேனநாயக்க, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சரத் முதத்தட்டுவேகம ஆகியோரும் அளிக்க முயன்ற தன்னிலை விளக்கம், ஒழுங்கு பிரச்னை ஆகியனவும் சபாநாயகர் பாக்கீர் மாக்காரினால் நிராகரிக்கப்பட்டதையடுத்து, முழு எதிர்க்கட்சியினரும் வெளிநடப்புச் செய்தனர்.

அரசின் நடவடிக்கையை தொண்டமான் காரசாரமாகவே கண்டித்து உரையாற்றினார். மிகக் கடுமையான தீவிரவாதத்தை எதிர்கொள்ளப்போகிறீர்கள் என்று எச்சரித்தார்.

அரசாங்க கட்சியினர் மாத்திரமே கலந்துகொண்ட “விவாதத்தில்” வாகெடுப்பு நடந்தது. வாக்களிப்பு ஏகமனதாக இருக்கவில்லை. தொண்டமான் வாக்களிக்கவில்லை. ஆனால், ஒரு வாக்கு பிரேரணைக்கு எதிராக அளிக்கப்பட்டது. ஷெல்ரன் ரணராஜா வாக்களிப்பில் கலந்துகொண்டு, பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார். பத்திரிகைக் கலரியில் எதிர்பாராத ஆச்சரியமாகவே இருந்தது. எனினும், அவர்மீது எந்த நடவடிக்கையையும் ஜே. ஆர். ஜயவர்த்தன பின்னர் எடுக்கவில்லை.

நாளைய தினம் வாக்கெடுப்பில் இலங்கையின் இறைமையிலும், இலங்கையுடனான நட்பிலும், தமிழர்களின் மனித, அரசியல் உரிமைகளிலும், தனது தார்மீக பொறுப்பிலும் இந்தியா வெளிப்படுத்தப்போகும் உணர்வு என்னவாகவிருக்கும்? ஆச்சரியமானதாகுமா...?

- மாலி

# தற்கொலை எண்ணங்கள் ஏற்படுவதாக யாராவது சொன்னால் என்ன செய்வது?



உங்களுக்கு நெருக்கமான ஒருவர், தாங்கள் மன ஆரோக்கியத்துடன் போராடுவதாகவும், தங்கள் உயிரை போக்கிக்கொள்ள நினைப்பதாகவும் சொன்னால், அந்த நேரத்தில் எப்படி நடந்துகொள்வது என்பது கடினமான ஒரு விஷயம்.

**நீங்கள் என்ன சொல்வீர்கள் அல்லது செய்வீர்கள்?**

கரோலைன் ப்ளாக் குறித்த ஆவணப்படம், சனல் 4 இல் ஒளிபரப்பாகிறது. 2020 ஆம் ஆண்டில் இந்த தொலைக்காட்சி தொகுப்பாளரின் தற்கொலைக்கு வழிவகுத்த நிகழ்வுகளை இந்தப்படம் ஆராய்கிறது.

தொகுப்பாளர் ரோமன் கெம்ப் தன்னுடைய மனநலம் தொடர்பான போராட்டங்கள் மற்றும் அவரது நெருங்கிய நண்பர் ஜோ லயன்ஸின் தற்கொலை பற்றியும் மனம்திறந்து பேசினார்.

ஒருவர் தன்னுடைய சிரமங்களை மனம் திறந்து வெளிப்படுத்தும்போது நாம் என்ன செய்ய வேண்டும் என சமரிட்டன்ஸ் என்ற மன நல தொண்டு அமைப்பின் தன்னார்வலர் அலெக்ஸ் டோட் தெரிவிக்கையில்-

**தற்கொலை உணர்வுள்ளவர்களுக்கு அதிக கவனம் கொடுங்கள்**

"நீங்கள் அவர்களின் பிரச்னைகளை தீர்க்க முடியாது. அவர்கள் என்ன உணர்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாது" என்று அலெக்ஸ் கூறுகிறார்.

"ஆனால் தற்கொலை எண்ணங்களைப் பற்றி யாராவது உங்களிடம் சொன்னால், அவற்றை எப்போதும் தீவிரமாக எடுத்துக் கொள்ளுங்கள்."

அவர்கள் தைரியமாக தங்கள் மனதில் இருப்பதை வெளிப்படையாக பேசக்கூடிய மற்றும் உதவி கிடைக்கும் என்று அவர்கள் உணரக்கூடிய சூழலை அளிப்பது முக்கியம் என்று அலெக்ஸ் விளக்குகிறார்.

"ஆரம்ப தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு, தான் உணர்வதைப்பற்றி பேசுவதுதான், மக்கள் செய்யக்கூடிய கடினமான காரியங்களில் ஒன்று ," என்கிறார் அவர்.

ஒருவர் பேசும்போது, நாம் நினைப்பதை சொல்வதற்காக குறுக்கிடுவது மனித இயல்பாக இருக்கலாம். ஆனால் அதைச் செய்யாமல் இருப்பது முக்கியம் என்று அலெக்ஸ் குறிப்பிடுகிறார்..

**அமைதியாக இருங்கள் மதிப்பிடாதீர்கள்**

இது "கடினமான விஷயங்களில் ஒன்று" குறிப்பாக இது ஒரு குடும்ப உறுப்பினராக இருக்கும்போது என்று அலெக்ஸ் விளக்குகிறார்.

"ஆனால் அவர்கள் மனதை திறக்க விரும்புகிறார்கள். அவர்களால் எதையும் பற்றி யோசிக்க முடியாது. முதலில் நீங்கள் அமைதியாக இருப்பது ஒரு நல்ல விடயம்."

அவர்களை பேச அனுமதிப்பது மிகவும் முக்கியம். அவர்களை மதிப்பிடுவது போன்ற விடயங்களை பற்றி அவர்களிடம் கேட்காதீர்கள்.

"உங்கள் குடும்பத்தினர் என்ன நினைப்பார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? நீங்கள் இந்த உலகத்தை விட்டு சென்றுவிட்டால் அவர்கள் எப்படி உணருவார்கள்?" என்பது போன்ற கேள்விகளை கேட்டால், நீங்கள் அவர்களை மதிப்பிடுவதாக நினைத்துவிடுவார்கள்." "மனம் திறந்து பேசுவதை நிறுத்தி விடுவார்கள்"

**வெளிப்படையான கேள்விகளைக் கேளுங்கள்**

யாராவது அழைத்தால் அலெக்ஸ் செய்யும் முதல் விடயம் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பது. அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ளவும், அவர்களுக்கு உதவவும் நான் இருக்கிறேன் என்று தெரியப் படுத்துகிறார். அவர்கள் மேலும் விஷயங்களை பகிர்ந்து கொள்ள ஏதுவாக அவர்களை வசதியாக உணரச்செய்யும் முயற்சி இது.

ஒருவரை பேச வைக்க வெளிப்படையான கேள்விகள் ஒரு சிறந்த வழியாகும். அதாவது: "நீங்கள் ஏன் இப்படி உணர்கிறீர்கள் என்பதைப் பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல முடியுமா? எது உங்களை இந்த நிலைக்கு கொண்டு வந்தது ?" போன்ற கேள்விகள்.

உதவி நெட்வொர்க்குகள் பற்றி கேட்பதும், இதற்கு முன்னால் அவர்கள் உதவி பெற்றுள்ளார்களா என்று கேட்பதும் சரிதான் என்று அவர் கூறுகிறார்.

அது எப்படி இந்த நிலைக்கு வந்தது என்பதையும், இதே போல இனி தொடர முடியாது என்று அவர்கள் ஏன் நினைக்கிறார்கள் என்பதையும் கேட்டறியலாம்." ஆனால் எல்லா நேரத்திலும் கேள்விகளை மட்டுமே கேட்காதீர்கள்.

" உண்மையில் அவர்களைப் பேச அனுமதியுங்கள், அந்த மௌனத்தை அவர்களுக்கு அளியுங்கள். தங்கள் மன பாரத்தை கொட்டித்தீர்க்க அது உதவும்."

**தேவைப்பட்டால் அரவணைத்து ஆதரவு கொடுங்கள்**

நமது இயல்பான உள்ளுணர்வு யாரையாவது கட்டிப்பிடிப்பதாக இருக்கலாம் (கொவிட் கட்டுப்பாடுகள் அனுமதித்தால்). ஆனால் முக்கிய விஷயம் அவர்களை வசதியாக உணரச்செய்வது.

"சிலர் கட்டிப்பிடிக்கப்படுவதை விரும்புவதில்லை. அவர்களிடமிருந்து விலகியே இருங்கள்." "ஆனால் நீங்கள் அந்த நபருடன் நெருக்கமாக இருந்தால், ஒரு அரவணைப்பு அல்லது அந்த நெருங்கிய தொடர்பு உதவும் என்று உங்களுக்குத் தெரிந்தால், அவர்களின் கையைப் பிடிக்க பயப்பட வேண்டாம்."

"யாரோ ஒருவர் நமக்காக இருக்கிறார் என்பதை உடல் ரீதியாக அறிந்துகொள் ளும் பாலத்தை கட்டியெழுப்ப , மனித தொடர்பு அருமையானது" என்று அவர் மேலும் கூறுகிறார்.

**அவர்களுக்கு மேலும் உதவியை சுட்டிக் காட்டுங்கள்**

ஒரு மருத்துவரிடம் பேசுவது அல்லது உதவி எண்ணை அழைப்பது போன்ற அவர்கள் செய்யக்கூடிய விஷயங்கள் குறித்த ஆலோசனைகளை வழங்குமாறு அலெக்ஸ் அறிவுறுத்துகிறார்.

ஆனால் இறுதியில், உதவி பெற அடுத்த நடடிக்கையை எடுப்பது அந்த நபரின் முடிவாக இருக்க வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

"அவர்கள் மனம் திறந்து பேசும் செயலானது, அவர்கள் உதவி பெற விரும்புகிறார்கள், இதன் மூலம் பிரச்னையை தீர்க்க விரும்புகிறார்கள் என்பதற்கான அறிகுறியாகும்."

"உணர்வுகள் தற்காலிகமானவை. ஆகவே, "இது எனது அடுத்த படி" என்று அவர்கள் சொல்லக்கூடிய இடத்திற்கு அவர்களை நாம் கொண்டு செல்லவேண்டும்."

# குடிசையில் வாழும் தமிழக வேட்பாளர்!

## ஊழல்வாதிகள் நிறைந்த தமிழக அரசியலில் இப்படியும் ஒரு எளிய மனிதர்!





தேர்தலில் போட்டியிட முதல் தகுதியாக செலவு செய்ய பணம் இருக்க வேண்டும் என்பது எழுதப்படாத விதியாகிப்போன சமகாலத்தில் 3000 ரூபாயை வைத்துக் கொண்டு வேட்பாளராக களமிறங்கியிருக்கிறார் மாரிமுத்து.

தமிழ்நாடு திருத்துறைப்பூண்டி தொகுதியில் தி.மு.க தலைமையிலான கூட்டணி சார்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக களமிறங்கியுள்ள மாரிமுத்து தான் அந்த எளிமையான வேட்பாளர்.

மாரிமுத்துவுக்கு சொந்த ஊர் திருத்துறைப்பூண்டி அருகே காடுவாக்குடி. அங்கு சென்று மாரிமுத்துவின் வீடு எங்கிருக்கிறது என்று கேட்டால், ஒரு சிறிய குடிசையை நமக்குக் காட்டுகிறார்கள் ஊர் மக்கள். அந்தக் குடிசை வீட்டில்தான் மாரிமுத்து அவரது தாய் தங்கம்மாள் மனைவி ஜெயசுதா மகள் தென்றல் மகன் ஜெயவர்மன் ஆகியோருடன் வசித்து வருகிறார்.

தொகுதிக்குள் ஒரு பழைய டூ விலரில் வலம் வரும் மாரிமுத்துவிடம் பேசினோம் "என் அப்பா ஒரு விவசாய கூலித்தொழிலாளி. இப்போது அவர் உயிரோட இல்லை. நான் விவசாய கூலி வேலைக்குப் போய்தான் பி.கொம் வரைக்கும் படிச்சேன். இப்ப என்கிட்ட ஒரு டூவிலர் இருக்கு. என்னோட கல்யாணத்துக்கு முன்னாடி அதுவும் கிடையாது. இப்ப எங்க குடும்பத்துக்குனு முக்கால் ஏக்கருக்கு குறைவாதான் வயல் இருக்கு. அதுல வரக்கூடிய வருமானத்தை மட்டும் வச்சு குடும்பத்தை ஓட்ட முடியாது. என்னோட மனைவியும் அம்மாவும் விவசாய வேலைகளுக்கு போறாங்க. என்னோட கட்சிக்காரங்களும் ஊர்மக்களும் தங்களால் முடிஞ்ச பொருளாதார உதவிகளை செய்றாங்க.

"இந்தத் தேர்தலில், வேட்பாளராக போட்டியிடுறதால, எனக்குனு தனிப்பட்டு பெருசா எந்த செலவும் கிடையாது. நோட்டீஸ் அடிக்குறது, மக்களை சந்திக்குறதுக்கான செலவுகள் மட்டும்தான். அதையும் எங்க கட்சி பார்த்துக்குது. இந்த குடிசை வீடு, 33 ஆயிரம் ரூபா விலை மதிப்புள்ள வயல், மூணு பவுண் நகை வங்கிக் கணக்கில் வைத்துள்ள 58 ஆயிரம் தேர்தல் செலவுக்காக நான் கையில வச்சிருக்குற மூவாயிரம் ரூபாய் ரொக்கம். இதுதான் என்னோட சொத்து மதிப்பு. தேர்தல் ஆணையத்துல இந்த விவரங்களைத் தான் தாக்கல் செஞ்சிருக்கேன்." என மிகவும் யதார்த்தமாகவும் எளிமையாகவும் வார்த்தைகள் உதிர்க்கிறார் மாரிமுத்து.

மாரிமுத்துவின் போராட்ட குணம், சேவை மனப்பான்மை குறித்து நம்மிடம் பகிர்ந்து கொண்ட ஊர்மக்கள் "கஜா புயல் அடிச்ச போது மாரிமுத்துவோட வீடு முழுசா சேதமடைஞ்சு போச்சு. அரசாங்கமும் சென்னையில உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனமும் சேர்ந்து முதல்கட்டமா 18 குடும்பங்களுக்கு வீடு கட்டித்தர ஏற்பாடு செஞ்சாங்க. இதே ஊர்ல ஒரு மாற்றுத்திறனாளி இருக்கார். அவரோட வீடும் பாதிக்கப்பட்டிருந்துச்சு. ஆனால் வீடு கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் லிஸ்ட்ல அவரோட பேர் இல்லை. அவருக்கு ஏமாற்றமாக போயிடுமேனு கவலைப்பட்டு தனக்கு கிடைச்ச வாய்ப்பை அவருக்கு விட்டுக்கொடுத்துட்டாரு மாரிமுத்து." என்றார்கள்.

குடிசை வாயிலில் அமைதியாக அமர்ந்திருக்கும் மாரிமுத்துவின் தாய் தங்கம்மாள் தற்போது பெரும் குழப்பத்தில் இருக்கிறாராம். கட்சிப்பணி மற்றும் ஊர் பொதுக்காரியங்கள் தொடர்பாக தனது மகனை பலரும் பார்க்க வருவது இயல்பானது. ஆனால் கடந்த சில நாள்களாக தனது மகன் மாரிமுத்து மிகவும் பரபரப்பாக காணப்படுகிறார். காலையில் வெளியில் சென்றால் நள்ளிரவில்தான் வீடு திரும்புகிறார். இதற்கான காரணத்தை தங்கம்மாவால் புரிந்துகொள்ள முடியவில்லையாம்.

"நான் தேர்தல்ல போட்டியிடுற விஷயத்தை, எவ்வளவோ எடுத்துச் சொல்லி புரிய வைக்கப் பார்த்தேன். எங்கம்மாவுக்கு எதுவும் புரியல. எங்கம்மாவுக்கு வெளியுலகம் எதுவும் தெரியாது. வீடு, வீடு விட்டா விவசாய வேலை. அவ்வளவுதான் அவங்களுக்கு தெரியும்" என சொல்லும் மாரிமுத்துவின் எளிமையான வாழ்க்கைப் பயணம் நம்மை நெகிழ வைக்கிறது.

# புலமைச் சிகரம் 21


**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**


கேள்விகள் பயிற்சி செய்வதற்கு

**01E.** தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்தல் அல்லது தரப்பட்ட உருக்களை பொருத்தமான ஒர்முறையில் கூட்டங்களாக்குவதாகவோ அமையலாம் .


**2009 (05), (06)**

♦ தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.


05. 

06. 

**2008 - ( 32, 33)**

32. 


ஆகிய இரு உருக்களையும் சேர்க்கும் போது கிடைக்கும் உரு யாது?



1. 2. 3. 4.

33.  ஆகிய இரு உருக்களையும்


சேர்க்கும் போது கிடைக்கும் உரு யாது?




1. 2. 3. 4.

**2012 (17), (18)**

♦ அடைப்புக்குள் இருக்கும் இரு கோலங்களையும் ஒன்றன் மீதொன்றாக கைக்கும் போது கிடைக்கும் உருக்களைத் தெரிவு செய்க.

17. 

18. 

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# இந்தியாவின் ஆலோசனைகள் இலங்கைக்கு அவசியமில்லை

## என்கிறார் விதுர விக்கிரமநாயக்க

மருதானை, மார்ச் 21

**மாகாண சபை தேர்தல் தொடர்பில் இலங்கை மக்களே தீர் மானிக்க வேண்டும். இவ்விடயத்தில் இந்தியாவின் ஆலோசனை பெற வேண்டிய தேவை எமக்குக் கிடையாது எனவும், வெள்ளை யானையாகக் கருதப்படும் மாகாண சபை முறைமையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லத் தயாரில்லை எனவும் தேசிய மரபுரிமைகள், கலை கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**



மருதானையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்:

வெள்ளை யானையாகச் சித்திரிக்கப் பட்டுள்ள மாகாண சபை முறைமை நாட்டுக்கு அவசியமற்றது என்பது பெரும்பாலான மக்களின் அபிப்பிரா யமாகக் காணப்படுகின்றது.

மாகாண சபைத் தேர்தல் அவசியமா?, இல்லையா? என்பது தொடர்பில் நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

இவ்விடயத்தில் இந்தியாவிடமும், இந்திய மக்களிடமும் ஆலோசனை ளைக் கோருவது பயனற்றது. பலவீன மான மாகாண சபை முறைமையைத் தொடர்ந்து வலுப்படுத்த நாம் தயா ரில்லை. மாகாண சபை முறைமையின் கீழ் வீண் செலவுகள் மாத்திரமே மிகு தியாகுகின்றன.

மாகாண சபைத் தேர்தலை விடுத்து உள்ளூராட்சி மன்றங்களைப் பலப் படுத்துவது தொடர்பில் கவனம் செலுத் தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்க ளும் அனைத்து இன மக்களின் பிரதிநிதி களையும் உள்ளடக்கியுள்ளன.

மாகாண சபை முறைமையில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. குறை பாடுகளுடன் மாகாண சபைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல முடி யாது. ஆகவே, மாகாண சபை முறைமை குறித்து உறுதியான தீர்மானம் வெகு விரைவில் எடுக்கப்படும்- என்றார். (எ)

# நியாயம் கிடைக்கும் வரை எமது போராட்டம் ஓயாது!

## சரத் பொன்சேகா உறுதி



கொழும்பு, மார்ச் 21

வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் இலங்கை மக்களுக்கான நியாயத்தை அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் வரையில் தாம் ஓயப்போவதில்லை என்றும், அதற்காக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள் ளதாகவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகம் முன்பு ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வெளிநாடுகளில் தொழில்புரிந்து வரும் இந்நாட்டு உழைக்கும் மக்களே, நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொடுத்தவர்கள்.

அரசாங்கம் தற்போது அதனை மறந்து செயல்பட்டு வருகின்றது. ஆளும்தரப்பு அமைச்சர் ஒருவர் வெளிநாட்டில் பணிபுரிந்து வரும் எமது மக்களை வெடிகுண்டு என்றும் தெரி வித்திருந்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் அவர்கள் பெரிதும் பாதிப் படைந்துள்ளனர். அவர்களுக்கான நிவாரணங்களை பெற்றுக் கொடுப்ப தற்காக அரசாங்கம் எத்தகைய முயற் சியும் இதுவரையில் எடுக்கவில்லை.

தேர்தலின் போது வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக அரச மரியா தையுடன் இந்த வெளிநாட்டு பணி யாளர்களை அழைத்து வந்தனர். ஆனால் தற்போது அவர்கள் தொடர்பில் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கா துள்ளனர்.

வெளிநாட்டுப் பணியாளர்கள் இன்று பாரிய நெருக்கடிக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அவர்களுக்கான நியா யத்தை பெற்றுக்கொடுக்கும் வரையில் நாங்கள் அமைதியாக இருக்கப் போவதில்லை.

இவ்விடத்தில் நாம் மாபெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெ டுப்போம். பாதிக்கப்பட்டுள்ளவர் களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக் கும் நோக்கத்திலேயே நாம் இத்தகைய செயல்பாடுகளில் ஈடுபடவுள்ளோம். தேர்தலை நோக்காக கொண்டு அல்ல - என்றார். (எ)

# ஒரு மாதத்துக்குள் உரிய தீர்வு!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் அமைச்சர் டக்ளஸ் நேற்று உறுதிபடத் தெரிவிப்பு





யாழ்ப்பாணம்,மார்ச் 21

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமாயின் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் குழு ஒன்றை அமைத்து ஒரு மாதத்துக்குள் தீர்வு பெற்றுத் தரமுடியும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்தார்.**



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு பரிகாரம் தேடும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட விஷேட கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலர் கலந்து கொண்டனர். இதன்போதே அமைச்சர் மேற்கண்டவாறு உறுதியளித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இரு அணிகளாகப் பிரிந்து செயல்படுகின்றனர். ஒரு தரப்பினர் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு கிடைக்கக் கூடாது எனவும் இன்னொரு தரப்பினர் இதற்குரிய தீர்வு கிடைக்க வேண்டும் எனவும் எதிர்பார்த்துள்ளனர். எனவே, எதிர்வரும் ஒரு மாதத்துக்குள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்குரிய தீர்வு, ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் கலந்துரையாடி பெற்றுக் கொடுக்கப்படும்- என்றார்.

இந்தக்கலந்துரையாடலின் போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால், தங்களது உறவுகள் பலர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எனவும் பலருக்கு என்ன நடந்தது? எனத் தெரியாது எனவும் குறிப்பிட்டனர்.

இதுதொடர்பில் கருத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா: இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாணவே நான் முயற்சிக்கின்றேன். இதனை, தீராத பிரச்னையாக வைத்திருக்க நான் விரும்பவில்லை. சில அரசியல் வாதிகள் இந்தப் பிரச்னையை தீராத பிரச்னையாக வைத்து அரசியல் செய்ய முயற்சிக்கின்றனர். எனினும் நான் இதற்கு ஒரு தீர்வு பெற்றுக் கொடுக்கும் முகமாகவே இன்று (நேற்று) முதற்கட்டமாக உங்களைச் சந்தித்துள்ளேன். எதிர் வரும் காலங்களில் உங்களை ஜனாதிபதியிடம் அழைத்துச் சென்று உரிய தீர்வு பெற்றுத் தர முடியும் என எதிர்பார்க்கின்றேன் எனத் தெரிவித்தார்.(எ-03)

# மணல் அகழ்வுக்கு அனுமதி மன்னாரில் வழக்கு தள்ளுபடி

மன்னார், மார்ச் 21

மன்னாரில் மணல் அகழ்வுக்கு அனுமதி கோரி நானாட்டன் பிரதேச சபை உறுப்பினர் தாக்கல் செய்த வழக்கினை மன்னார் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மன்னார் மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வுகள் மற்றும் ஒழுங்கமைக்கப் படாத மணல் அனுமதிகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்களாலும் பிரதேச சபை உறுப்பினர்களாலும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் கடந்த மாதம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவால் அனைத்து வித மணல் அகழ்வுகளுக்கும் தடை விதிக்கப்பட்டதுடன், மணல் அகழ்வு தொடர்பில் ஒழுங்கமைக்கப்பட்டதன் பின்னர் அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தீர்மானிக்கப் பட்டது.

இந்நிலையில் நானாட்டன் பிரதேச சபை உறுப்பினரும், திடீர் மரண விசாரணை அதிகாரியுமான றொஜன் ஸ்ராலின் தனக்கு வழங்கப்பட்ட மணல் அகழ்வுக்கான அனுமதி புதுபிக்கப்படவில்லை யெனவும், அரச அதிகாரிகள் தங்கள் பணியை ஒழுங்காக மேற்கொள்ளவில்லை எனவும் கோரி மன்னார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், நானாட்டன் பிரதேச செயலாளர் மற்றும் சுரங்கம் மற்றும் அகழ்வுக்குப் பொறுப்பான அதிகாரி மீது வழக்குத் தாக்கல் செய்த நிலையில் விசாரணை இடம்பெற்று இறுதியில் வழக் குத் தள்ளுபடி செய்யப்பட் டது. (எ)

# பிரித்தானிய மேல் நீதிமன்றத்தால் பிரியங்க பெர்னாண்டோ விடுவிப்பு

லண்டன், மார்ச் 21

பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகத்தின் முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னாண்டோவை குற்றச்சாட்டுக்களிலிருந்து பிரித்தானிய மேல் நீதிமன்றம் விடுவித்தது.

இதனை பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம், அறிக்கை ஒன்றை வெளியிட்டு உறுதிப்படுத்தியது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி லண்டனில் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு முன்பு இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தையடுத்து மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டன.



இந்நிலையில், பிரித்தானிய மேல் நீதிமன்றம் மேஜர் ஜெனரல் பிரியங்க பெர்னாண்டோவை குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவித்தது. (எ)

# வெளிநாட்டுக் கடன் செலுத்த அரசாங்கத்திடம் நிதியில்லை

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 21

அரசாங்கத்திடம் எதிர்வரும் மாதங்களில் செலுத்தப்பட வேண்டிய வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்துவதற்கான நிதி இல்லை. அத்தோடு தனியார்த்துறை மற்றும் வங்கிகள் மீளச் செலுத்த வேண்டிய கடன் தொகை அரசாங்கத்தால் செலுத்தப்படவுள்ள கடன் தொகையை விட பன்மடங்கு அதிகமாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

தற்போது அமெரிக்க டொலரின் பெறுமதி 203.15 ரூபாவாகும். இந்நிலையில் எதிர்வரும் மாதங்களில் மீளச் செலுத்த வேண்டிய கடனுக்கான டொலர்கள் அரசாங்கத்திடமில்லை.

சீனாவிடமிருந்து கிடைக்கப் பெறவுள்ளதாகக் கூறிய ஒன்றரை பில்லியன் ரூபாயும் கிடைக்கப் பெறாமல் போயுள்ளது.



அவ்வாறு கிடைத்தால் அதனை இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும்.

அரச கடன் தவிர தனியார்த் துறையினரும், வங்கிகளும் செலுத்த வேண்டிய கடன்களும் உள்ளன. இவை இலங்கை அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களை விட அதிகமானதாகும்.

இது இவ்வாறிருக்க சீனாவிடமிருந்து யுவான்களில் நிதியுதவி கிடைக்கவுள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு கிடைத்தாலும் அது டொலர்களில் நாம் மீளச் செலுத்த வேண்டியுள்ள கடன் தொகைக்கு போதுமான தொகையாகக் காணப்படாது- என்றார். (எ)



# தன்சானியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக சமியா சுலுஹு!

டொடமா, மார்ச் 21
தன்சானியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக சமியா சுலுஹு ஹஸன் பதவியேற்றுள்ளார்.
நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில் அவர் உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக்கொண்டார்.
இந்த பதவியேற்பு நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதிகளான அலி ஹஸன் வினை, ஜகாயா கிக்வேடே, அபைத் கருமே ஆகியோர் கலந்துகொண்டனர்.
இதுவரை துணை ஜனாதிபதியாக பதவி வகித்து வந்த அவர், உடல் நலக் குறைவு காரணமாக உயிரிழந்த ஜோன் மெகுபுலிக்கு பதிலாக ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
61 வயதான சமியா சுலுஹு ஹஸன், இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு ஜனாதிபதி பதவியை தொடருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# 800 ஆண்டுகளின் பின்னர் சீற்றம் கொண்ட ஐஸ்லாந்து பாக்ரடல்ஸ்ப்ஜால் எரிமலை!




ரேக்யூவீக், மார்ச் 21
ஐஸ்லாந்து தலைநகர் ரேக்யூவீக் அருகே உள்ள பாக்ரட ல்ஸ்ப்ஜால் (Fagradalsfjall) எரிமலை 800 ஆண்டுகளுக்குப் பிறகு சீற்றம் கொண்டு நெருப்புக் குழம்புகளை கக்கி வருகிறது.
தலைநகர் ரேக்யூவீக்கில் இருந்து தென்மேற்கே சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்த எரிமலை சீற்றம் கொள்ள ஆரம்பித்துள்ளதாக ஐஸ்லாந்து வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
கிரீன்விச் சராசரி நேரப்படி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8.45 மணிக்கு இந்த எரிமலை வெடித்தது. செயற்கைக்கோள் படங்கள் மூலமாக இது உறுதி செய்யப்பட்டது எனவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
ரேக்யூவீக் தீபகற்பத்தில் உள்ள இந்த பாக்ரடல்ஸ்ப்ஜால் எரிமலை வாயின் பிளவு 500 முதல் 700 மீட்டர் நீளமுள்ளது எனவும் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2010 ஆம் ஆண்டு ஐஸ்லாந்தின் ஐஜாஃப்ஜல்லஜோகுல் (Eyjafjallajokull) எரிமலை வெடித்தபோது ஐரோப்பா முழுவதும் விமானப் போக்குவரத்து ஸ்தம்பித்தது.
ஆனால் தற்போது சீற்றம் கொண்ட பாக்ரடல்ஸ்ப்ஜால் எரிமலை சாம்பலையும், புகையையும் அவ்வளவாக உமிழாது என்றும் அதனால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்படாது என்றும் நம்பப்படுகிறது.
ஐஸ்லாந்தின் கடலோரக் காவல் படை ஹெலிகொப்டர் ஒன்று இந்தப் பகுதியை ஆய்வு செய்து எரிமலைக் குழம்பு வழியும் காட்சியைப் படம் பிடித்து வெளியிட்டுள்ளது.
எரிமலை வெடிப்பதற்குப் பல மணி நேரம் முன்பாக அந்த எரிமலையில் இருந்து 1.2 கி.மீ. தொலைவில், 3.1 அளவுள்ள நிலநடுக்கம் ஏற்பட்டது.
இதேவேளை, ஐஸ்லாந்தில் கடந்த 20 நாட்களில் மாத்திரம் 40,000 நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாகவும் வழக்கத்திற்கு மாறாக குறுகிய காலத்தில் அதிக அளவில் நில அதிர்வுகள் பதிவாகியுள்ளதாகவும் அந்நாட்டு நில அதிர்வு கண்காணிப்பு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

# 8 மாத கர்ப்பிணியை கொலை செய்து வயிற்றை கிழித்து குழந்தை திருட்டு!

## பிரேஸிலில் பெண் ஒருவர் கைதானார்

பிரேசிலியா, மார்ச் 21
பிரேசிலில் எட்டு மாத கர்ப்பிணிப்பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு, அவரது வயிற்றிலிருந்த குழந்தை திருடப்பட்டுள்ளது.
நேற்று முன் தினம் மதியம், பமீல்லா பெரீரா (வயது-21) என்ற கர்ப்பிணி இளம்பெண், கொடூரமாக தாக்கப்பட்டு கொலைசெய்யபட்டார். அவரது வயிறு கிழிக்கப்பட்டு குழந்தை திருடப்பட்டிருந்தது. குழந்தையை பொலிஸார் தேடிக்கொண்டிருக்க, அதே நேரத்தில், அருகிலுள்ள மருத்துவமனை ஒன்றுக்கு 22 வயதுள்ள என்ற பெண், குழந்தை ஒன்றுடன் சென்றுள்ளார். ஆனால், அந்த குழந்தை உயிருடன் இல்லை.
வீட்டில், தானே குழந்தை பெற்றுக்கொண்டதாகவும், குழந்தையுடன் படியிலிருந்து இறங்கும்போது தடுக்கி விழுந்துவிட்டதாகவும் அந்த பெண் கூறியுள்ளார்.
ஆனால், மருத்துவர்கள் அவரை பரிசோதித்தபோது அதற்கான அடையாளங்கள் எதுவும் அவரிடம் இல்லை. சந்தேகமடைந்த மருத்துவமனை நிர்வாகம் பொலிசாருக்கு தகவலளித்தது.
பொலிஸ் விசாரணையில், அந்த பெண் கர்ப்பமுற்றிருப்பதுபோல் நடித்து வந்ததும், சம்பவம் நடப்பதற்கு முன்தினம், அவர் பமீலாவுடன் கூட இருந்ததும் தெரியவந்துள்ளது.
குழந்தை எப்படி இறந்தது என்பதை அறிவதற்காக, அதற்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. தனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்பதற்காக பெண் ஒருவர் ஒரு கர்ப்பிணிப் பெண்ணை கொடூரமாக கொலை செய்து, அவரது வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுத்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
(அ)

# தலைமன்னாரில் இருந்து பாக் ஜலசந்தி கடலை நீந்தி கடந்த 48 வயதான பெண்

சென்னை, மார்ச் 21
தலைமன்னாரில் இருந்து தனுஸ்கோடி வரையிலான பாக் ஜலசந்தி கடலை நீந்தி கடந்து சென்று தெலுங்கானாவைச் சேர்ந்த 48 வயதான பெண் ஆசிரியர் சாதனை படைத்துள்ளார்.
தலைமன்னாரில் இருந்து நேற்று முன் தினம் அதிகாலை 4 மணி 10 நிமிடத்தில் அவரது நீச்சல் ஆரம்பமாகி நேற்று முன் தினம் மாலை 5 மணி 50 நிமிடங்களுக்கு நிறைவு செய்தார். தமிழகத்தையும், இலங்கையையும் பாக் ஜலசந்தி கடற்பகுதி பிரிக்கிறது.
ராமேஸ்வரம் தீவும், அதை தொடர்ந்துள்ள மணல் திட்டுக்களான ராமர் பாலமும் பாக் ஜலசந்தி கடற்பகுதியை மன்னார் வளைகுடாவில் இருந்து பிரிக்கிறது.
தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த, அதே சமயம் பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்களும் நிறைந்த கடற்பகுதி இது.
பாக் ஜலசந்தி கடற்பகுதியை இலங்கை வல்வெட்டித்துறையை சேர்ந்த நவரத்தினசாமி என்ற தமிழர் முதன் முதலாக 1954ஆம் ஆண்டு நீந்திக் கடந்தார்.
தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு கொல்கத்தாவை சேர்ந்த மிகிர்சென் என்பவர் பாக் ஜலசந்தியை தலை மன்னாரில் இருந்து தனுஸ்கோடி வரை நீந்திக் கடந்தார்.
வல்வெட்டித்துறையை சேர்ந்த நீச்சல் வீரரான ஆழிக்குமரன் ஆனந்தன் 1971 ஆம் ஆண்டு தலைமன்னாரில் இருந்து தனுஸ் கோடிக்கு நீந்தி வந்து, மீண்டும் தலைமன்னாருக்கு 51 மணி நேரத்தில் நீந்திச் சென்று சாதனை படைத்தார்.
இந்நிலையில், பல்வேறு நீச்சல்போட்டிகளில் சாதனை படைத்த தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத்தைச் சேர்ந்த சியாமளா கோலி (வயது-48), தலைமன்னாரில் இருந்து தனுஸ்கோடி வரையிலான சுமார் 30 கி.மீ. தூரம் கொண்ட பாக்



ஜலசந்தி கடற்பகுதியை நீந்தி சாதனை படைத்தார்.
தலைமன்னாரில் நேற்று முன்தினம் அதிகாலை 4 மணி 10 நிமிடத்தில் அவரது நீச்சல் ஆரம்பமானது. சியாமளா கோலி 30 கி.மீ தூரத்தை தனுஸ்கோடி அரிச்சல்முனை கடற்கரைக்கு நேற்றுமுன்தினம் மாலை 5 மணி 50 நிமிடங்களுக்கு சுமார் 13 மணி 40 நிமிட நேரத்தில் சென்றடைந்தார்.
இதன் மூலம் பாக் ஜலசந்தியை நீந்தி கடந்த 13ஆவது நீச்சல் வீரராகவும் உலகளவில் இரண்டாவது வீராங்கனையாகவும், இந்திய அளவில் முதல் வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார்.
கடந்த ஆண்டு பாக் ஜலசந்தி கடலை நீந்தி கடப்பதற்கு இந்திய - இலங்கை அரசுகளிடம் அனுமதி கிடைத்தது. ஆனால் கொரோனா பரவல் காரணத்தினால் முடியாமல் போனது.
பாக் ஜலசந்தியை பெண்ணாக நான் நீந்தி கடந்ததன் மூலம் பெண்களால் அனைத்து சாதனைகளையும், உயர்ந்த இலக்குகளை அடைவதற்கு நம்பிக்கை அளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என தலைமன்னார் முதல் தனுஸ்கோடி வரையிலான கடலை நீந்தி கடந்த சியாமளா கோலி தெரிவித்தார்.

# பின்லாந்தில் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிக்கு தற்காலிக தடை!



ஹெல்சிங்கி, மார்ச் 21
ஒக்ஸ்போர்ட்- அஸ்ட்ராசெனகா கொரோனா வைரஸ் தடுப்பூசியின் பயன்பாட்டை, பின்லாந்து தற்காலிகமாக நிறுத்தியுள்ளது.
அஸ்ட்ராசெனகா தடுப்பூசியை போட்டுக்கொண்டவர்களில் இரண்டு பேருக்கு இரத்தம் உறைதல் பிரச்னை ஏற்பட்டதால், தடுப்பூசி போடும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளது.
இது குறித்து மருத்துவ ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க ஒரு வார காலம் ஆகலாம் என்பதால், அதுவரை அஸ்ட்ராசெனகா தடுப்பூசியை பின்லாந்து நாட்டு மக்களுக்கு செலுத்த அரசாங்கம் தற்காலிகமாக தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.
முன்னதாக அஸ்ட்ராசெனெகா தடுப்பூசி போட்டுகொண்ட முதியவர்கள் பலருக்கு இரத்த உறைவு ஏற்படக்கூடிய பல சம்பவங்கள் தெரிய வந்ததையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் நிறைவடையாத விசாரணை காரணமாக ஒன்பது ஐரோப்பிய நாடுகள் தடுப்பூசியின் பயன்பாட்டை நிறுத்தி வைத்தன.
எனினும், தற்போது ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளின் ஆய்வு அறிக்கைகளின் முடிவுகளில் தடுப்பூசியால் பக்கவிளைவுகள் எதுவும் ஏற்படவில்லை என்பது தெளிவாகியிருப்பதால், மீண்டும் தடுப்பூசி போடும் பணிகளை தொடங்கியுள்ளன.

# இறுதிப் போட்டியில் இலங்கை லெஜண்ட்ஸ்!

ராய்ப்பூர், மார்ச் 21

தென்னாபிரிக்க லெஜண்ட்ஸ் அணியுடன் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் 8 விக்கெட்டுகளால் அபார வெற்றி பெற்ற இலங்கை லெஜண்ட்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இறுதிப் போட்டியில் இந்திய லெஜண்ட்ஸ் அணியுடன் மோதுகின்றது.

வீதி பாதுகாப்பு ரி20 தொடர் இந்தியாவின் ராய்ப்பூரில் இடம்பெற்று வருகின்றது.

இத் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் லெஜண்ட்ஸ் அணியை தோற்கடித்த இந்திய லெஜண்ட்ஸ் இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நடந்த 2ஆவது அரையிறுதியில் இலங்கை லெஜண்ட்ஸ் அணியும் தென்னாபிரிக்க லெஜண்ட்ஸ் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை லெஜண்ட்ஸ் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

முதலில் ஆடிய தென்னாபிரிக்க லெஜண்ட்ஸ் அணி இலங்கை லெஜண்ட்ஸ் அணியின் பந்து வீச்சுக்கு தாக்குப்பிடிக்க முடியாது சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் தென்னாபிரிக்க லெஜண்ட்ஸ்




அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

அந்த அணி சார்பாக வன் வெய்க் 53 ஓட்டங்களையும் அல்வீரோ பீற்றர்சன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை லெஜண்ட்ஸ் அணி சார்பில் நுவான் குலசேகர 25 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

126 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணி 17.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட் இழப்பிற்கு 129 ஓட்டங்களை பெற்று, 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இலங்கை அணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய ஜெயசிங்க 47 ஓட்டங்களையும் (25 பந்து), தரங்க 39 ஓட்டங்களையும் (44 பந்து) பெற்றுக்கொடுத்தனர். டில்சானும், ஜெயசூரியவும் தலா 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க லெஜண்ட்ஸ் அணி சார்பாக நிற்னி மற்றும் பீற்றர்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இலங்கை லெஜண்ட்ஸ் அணி நாளை இந்திய லெஜண்ட்ஸ் அணியை இறுதிப் போட்டியில் சந்திக்கவுள்ளது.

# ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் தகுதி சுற்று போட்டி ஒத்திவைப்பு

அவுஸ்ரேலியாவில் 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 8வது ரி-20 உலகக்கிண்ண தொடருக்கான, தகுதி சுற்று போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) அறிவித்துள்ளது.

கொவிட்-19 தொற்றின் மூன்றாம் அலை மற்றும் சில நாடுகளில் விதிக்கப்பட்டுள்ள கொவிட்-19 கட்டுப்பாடுகள் காரணமாக இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சி. விளக்கம் அளித்துள்ளது.

2022ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ண தொடருக்கான, ஆசியா ஏ மண்டலத்திற்கான தகுதி சுற்று ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை குவைத்தில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இதில் பஹ்ரைன், குவைத், மாலைத்தீவு, கட்டார், சவுதி அரேபியா ஆகிய அணிகள் பங்கேற்க இருந்தன.

இந்த நாடுகளில் தற்போது கொவிட்-19 பாதிப்பு தீவிரமடைந்து வரும் நிலையில், தகுதி சுற்றுப் போட்டிகள், எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இதே போல் ஆபிரிக்க மண்டலத்திற்கான தகுதி சுற்று ஏ,பி என்று இரு வகையாக பிரிக்கப்பட்டு தென்னாபிரிக்காவில் அடுத்த மாதம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த போட்டிகளும் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

7ஆவது ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர், எதிர்வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பங்களாதேஷை வீழ்த்தி நியூஸிலாந்து வெற்றி!

பங்களாதேஷ் கிரிக்கெட் அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் நியூஸிலாந்து அணி முன்னிலைப் பெற்றுள்ளது.

டுனெடின் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, 41.5 ஓவர்கள் நிறைவில் 131 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, மொஹமதுல்லா 27 ஓட்டங்களையும் ரஹீம் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ட்ரெண்ட் போல்ட் 4 விக்கெட்டுகளையும் ஜேம்ஸ் நீஷம் மற்றும் மிட்செல் சான்ட்னர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மெட் ஹென்ரி 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 132 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 21.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஹென்ரி நிக்கோல்ஸ் ஆட்டமிழக்காது 49 ஓட்டங்களையும் மார்டின் கப்டில் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், ஹசன் மொஹமுத் மற்றும் டஸ்கின் அஹமட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 4 விக்கெட்டுகளை சாய்த்த ட்ரெண்ட் போல்ட் தெரிவு செய்யப்பட்டார்.

# டோனியை சமன் செய்தார் ஆப்கான் அணித் தலைவர்!

அபுதாபி, மார்ச் 21

சிம்பாவேயுடனான 2ஆவது ரி-20 போட்டியில் ஆப்கானிஸ்தான் வெற்றி பெற்றதை தொடர்ந்து, அதிக ரி-20 வெற்றிகளை பெற்ற அணித் தலைவர் என்ற இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் மகேந்திர சிங் தோனியின் சாதனையை சமன் செய்துள்ளார் ஆப்கானிஸ்தான் அணியின் அணித் தலைவர் அஸ்கர் ஆப்கன்.

வெற்றி சதவிகிதத்தில் இந்திய அணியை விட, ஆப்கான் அசுர வேகம் காட்டியுள்ளது.

அபுதாபியில் நடந்த சிம்பாப்பே அணிக்கு எதிரான 2ஆவது ரி-20 போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி அபார வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 193 ஓட்டங்கள் சேர்த்து. 194 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய சிம்பாப்வே அணி 17.1 ஓவர்களில் 148 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து 45 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

இந்தப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி அடைந்த வெற்றி என்பது அந்த அணியின் அணித் தலைவர் அஸ்கர் ஆப்கன் தலைமைக்குக் கிடைத்த 41ஆவது ரி-20 வெற்றியாகும்.

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் எம்.எஸ்.தோனி, 72 ரி-20 போட்டிகளுக்கு கப்டனாக பொறுப்பேற்று 41 வெற்றிகளைப் பெற்றுக்கொடுத்தார். அந்தச் சாதனையை அஸ்கர் ஆப்கன் சமன் செய்துவிட்டார்.

தோனி 72 போட்டிகளுக்கு கப்டனாகப் பொறுப்பேற்று 41 வெற்றிகளைப் பெற்றுள்ளார். ஆனால், ஆப்கானிஸ்தான் அணித் தலைவர் அஸ்கர் 51 போட்டிகளில் 41 வெற்றிகளைப் பெற்று 81.37 சதவீதம் வெற்றிகளைப் பதிவு செய்துள்ளார்.

தோனியின் தலைமையில் இந்திய அணி ரி20 போட்டியில் 59.23 சதவீத வெற்றிகளைத்தான் பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்து அணியின் தலைவர் மோர்கன் 33 வெற்றிகளுடன் 3ஆவது இடத்திலும், பாகிஸ்தானின் சர்பிராஸ் அகமது 29 வெற்றிகளுடன் 4ஆவது இடத்திலும் உள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் அணித் தலைவர் டரன் சாமி தலைமையில் அந்த அணி 27 வெற்றிகளைப் பெற்று 5ஆவது இடத்தில் உள்ளார்.

அதுமட்டுமல்லாமல் இந்தப் போட்டியில் ஆப்கானிஸ்தான் சுழற்பந்துவீச்சாளர் ரஷித் கான் 3 விக்கெட்டுகளை



வீழ்த்தினார். இதன் மூலம் ரி-20 போட்டிகளில் அதிகமான விக்கெட்டுகளை வீழ்த்திய பந்துவீச்சாளர்களில் 3ஆவது இடத்தை ரஷித் கான் பெற்றார்.

தற்போது ரஷித் கான் 95 விக்கெட்டுகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளார். பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் ஷாகித் அப்ரிடி 2ஆவது இடத்திலும், இலங்கை முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் லசித் மலிங்க முதலிடத்திலும் உள்ளனர்.

# தேவைக்கேற்ப மாகாண சபை தேர்தல் சட்ட மூலத்தை உருவாக்குவது தவறு

## அரசின் நடவடிக்கைக்கு ஐ.ம.ச. எதிர்ப்பு



**கொழும்பு,மார்ச் 21**

**மாகாண சபைத் தேர்தல் தொடர்பான புதிய சட்ட மூலத்தை உருவாக்குவதற்கான அதிகாரம் குறித்தவொரு குடும்ப அங்கத்தவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்துக்கு அறிவிக்காமல் இவ்வாறு அரசாங்கத்தின் தேவைக்கேற்ப சட்ட மூலத்தை உருவாக்குவது தவறாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**


கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

புதிய சட்ட மூலத்தை உருவாக்க சகல கட்சிகளினதும் ஆலோசனைகள், கருத்துக்கள் கோரப்பட வேண்டும். 19 ஆவது திருத்தத்தை நல்லாட்சி அரசாங்கத்தில் நாம் அவ்வாறு தான் உருவாக்கினோம். எனவே, மாகாண சபை தொடர்பான புதிய சட்ட மூலமொன்றை உருவாக்குவதாயின் பாராளுமன்றத்தில் அது தொடர்பில் அறிவிக்குமாறு கோருகின்றோம்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு கோரப்பட்டது. எனினும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைத்து இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நாம் அறிவித்திருந்தோம். ஆனால், அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறு புதிய அரசமைப்பொன்றை உருவாக்க முடியாது. மறுபுறம் 13 ஆவது திருத்தத்துக்கு இணக்கம் தெரிவிக்க முடியாது எனக் கூறுபவர்களே தற்போது தேர்தலை நடத்த ஆயத்தமாகின்றனர். தற்போதைய அரசாங்கத்துக்கு ஸ்திரமான கொள்கையோ வேலைத்திட்டமோ கிடையாது.

இதேவேளை, சீனி இறக்குமதி வரி குறைப்பு மூலம் நட்டம் ஏற்பட்டுள்ளது என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. எனவே, இனியும் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டிய தேவை கிடையாது. நேரடியாக வழக்குத் தொடர முடியும். காரணம் மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் போது எமது அரசாங்கத்திலேயே வழக்குத் தொடரப்பட்டது.

இந்நிலையில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றதாகவுள்ளது. அதில் எவ்வித சாட்சிகளும் உள்ளடக்கப்படவில்லை. ஆணைக்குழுவொன்றுக்கு விசாரணைகளை முன்னெடுத்து தீர்ப்பும் வழங்க முடியாது. ஆனால், இந்த ஆணைக்குழு அவை இரண்டையும் செய்துள்ளது. முக்கிய சாட்சிகளை முன்னிலைப்படுத்தியிருந்தால் தற்போதைய அரசாங்கத்தின் மீது குற்றம்சுமத்தப்பட்டிருக்கும்- என்றார். (எ)






# பங்களாதேஷின் ஒத்துழைப்பை இலங்கை அரசு எதிர்பார்க்கிறது

## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

டாக்கா,மார்ச் 21

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலுள்ள சார்க் விவசாய மையம் செயல்பாட்டு ரீதியில் பங்கு வகிப்பதோடு மட்டுமல்லாமல், பங்களாதேஷ் தொடர்ந்து எமது விவசாய நிறுவனங்களுக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டை எளிதாக்குகிறது. இத்துறையில் நெருக்கமான ஒத்துழைப்பைப் பகிர்ந்து கொள்வதில் பங்களாதேஷ் அரசாங்கத்தின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பங்களாதேஷுக்கு இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, பங்கபந்து ஷெயிக் முஜிபர் ரஹ்மானின் ஜனன தின நூற்றாண்டு விழா மற்றும் பங்களாதேஷின் சுதந்திர பொன்விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

எங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்பு ரீதியான உறவுகளுக்கு மிக நீண்ட வரலாறு உண்டு. சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் வங்காளத்திலிருந்து முதல் குடியேற்றவாசிகள் கடல் மார்க்கமாக இலங்கைக்கு வந்ததாக பல அறிஞர்கள் நம்புகின்றனர்.

இந்த 21 ஆம் நூற்றாண்டில், ஆசியாவின் வளர்ச்சிக்கான பெரும் அபிலாஷைகளுடன், சுதந்திரத்தை அடைய நம்முன்னோர்கள் செய்த எண்ணற்ற தியாகங்களைப் பற்றி நமது புதிய தலைமுறையினர் அறிந்திருக்க வேண்டும்.

சுதந்திரம் மற்றும் சுபீட்சத்தை அடைவதற்கு ஒரு அண்டை நாடு என்ற ரீதியிலும் நெருங்கிய நண்பராகவும் இலங்கை பங்களாதேஷுடன் பக்கபலமாக நிற்கிறது. பாரிய சவால்களுக்கு மத்தியிலும் பொருளாதார மாற்றம், வறுமை ஒழிப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்கை அடைதல் போன்ற எமது குறிக்கோள்களுக்கு முன்னுரிமை வழங்கி வருகின்றோம் எனத் தெரிவித்தார். (எ)

# சொந்த நாட்டுக்கு வர லஞ்சம்!

## தொழிலாளர்களின் அவலநிலை குறித்து ஐக்கிய மக்கள் சக்தி அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, மார்ச் 21

எமது நாட்டில் மாத்திரமே சொந்த நாட்டுக்கு வருவதற்காக இலஞ்சம் கொடுக்கவும், பேரணியில் நிற்கவும், போராட்டங்களில் ஈடுபடவும் வேண்டியுள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகம் முன்பு ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:



கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் நாட்டுக்குத் திரும்ப முடியாமல் வெளிநாட்டில் தொழில் புரிந்து வரும் எமது நாட்டவர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

சிலர் முகாம்களிலே உயிரிழந்தனர். இன்னும் சிலர் நோய்வாய்ப்பட்டுள்ளனர். வைரஸ் பரவலுக்கு மத்தியில் அவர்களை அழைத்து வருவதற்கான வாய்ப்பு இருந்தும் அரசாங்கம் அதற்கான முயற்சிகளை எடுக்காமல் இருக்கின்றது. எமது நாட்டில் மாத்திரமே சொந்த நாட்டுக்கு வருவதற்காக இலஞ்சம் கொடுக்கவும், பேரணியில் நிற்கவும், போராட்டங்களில் ஈடுபடவும் வேண்டியுள்ளது.

இந்நிலையில் அவர்களிடமிருந்து மேலும் பணம் பறிப்பதை நிறுத்தி விட்டு, அவர்களை உடனடியாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்- என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன தெரிவிக்கையில்: வெளிநாடுகளில் பணிபுரிய சென்ற எமது நாட்டுத் தொழிலாளர்கள், இன்று தொழில் எதுவுமின்றி பாதிப்படைந்துள்ளனர்.

அவர்களுக்கு அங்கு போதிய உணவு, நீர், மருத்துவம் என்பன கிடைப்பதில்லை. இவர்களின் இக்கட்டான நிலை தொடர்பில் அரசாங்கத்துக்குப் புரியாமல் இருப்பதற்கான காரணம் என்ன?

இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள இந்நாட்டு தாய்மார்களை அழைத்து வருவதற்காக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திடம் அதற்கான வசதிகள் இல்லாவிட்டால், வரிப் பணத்தை அல்லது வெளிநாட்டில் உழைக்கும் மக்களின் நிதியத்தை பயன்படுத்தியாவது அவர்களை நாட்டுக்கு அழைத்து வருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்- என்றார். (எ)

# இலங்கையில் அவசரகால பயன்பாட்டுக்கு சினோபோர்ம் தடுப்பூசிக்கு அங்கீகாரம்

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் அவசரகால பயன்பாட்டுக்கு சீனாவின் சினோபோர்ம் கொரோனா தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது என பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இதுவரை இந்தியாவில் தயாரிக்கப்படும் ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராசெனேகா தடுப்பூசிக்கும் ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தற்போதுவரை இந்தியாவின் சீரம் நிறுவன கொரோனா தடுப்பூசி மட்டுமே பாவனையில் உள்ளது. (எ)

ஈழநாடு
Eelanadu

# யாழில் ஹெரோயின் விற்ற சிறை அதிகாரி சிக்கினார்!

## கைதிகளுக்கு போதைப்பொருள் விநியோகம் குறித்து மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தீவிர விசாரணை



**யாழ்ப்பாணம், மார்ச் 21**

**யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த சிறைச் சாலை உத்தியோகத்தர் ஒருவர் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.**

**இதேவேளை, கைதிகளுக்கு போதைப்பொருள் விநியோகிக்கப்பட்டதா என்பது தொடர் பில் அதிகாரிகள் தீவிர விசாரணையில் இறங்கியுள்ளனர்.**

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது: யாழ்ப்பாணம் மார்டீன் வீதிச் சந்தியில் வைத்து நேற்று முற்பகல் 11.30 மணியளவில் சிறைத்துறை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 2 இலட்சம் ரூபாய் பெறுமதியான 20 கிராம் ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கூறினர்.

சந்தேக நபர், போதைப்பொருள் கடத்திலில் ஈடுபட்டதுடன், கைதிகளுக்கு போதைப்பொருள் விநியோகித்துள்ளார் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

சந்தேக நபரை நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (எ)



# ஆயுர்வேத சிகரெட்டுக்கு ஆயுர்வேத சூத்திர குழு அனுமதி பெறவில்லை!

கொழும்பு, மார்ச்.21

அமைச்சர் விமல் வீரவன்ஸவால் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றின்போது அறிமுகப்படுத்தப்பட்ட ஆயுர்வேத சிகரெட் எனக் கூறப்படும் சிகரெட்டானது, ஆயுர்வேத சூத்திர குழுவிடமிருந்து எந்தவொரு அனுமதியையும் பெறவில்லை என அகில இலங்கை அரச ஆயுர்வேத வைத்திய அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அச்சங்கத்தின் ஏற்பாட்டுக்குழு செயலாளரான வைத்தியர் எம்.எஸ்.ஜே. பண்டார ஊடக சந்திப்பொன்றின்போது கூறுகையில்:

அமைச்சர் விமல் வீரவன்ஸ கைத்தொழில் அமைச்சின் ஊடாக, சிகரெட் வகை ஒன்றை ஆயுர்வேதம் என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளார். நாம் மிகவும் தெளிவாக அமைச்சருக்கும் மக்களுக்கும் கூறிக்கொள்வது, ஆயுர்வேதத்தின் பெயரைப் பயன்படுத்தி இத்தகைய செயல்களில் ஈடுபடாதீர்கள் என்பதேயாகும்.

ஆயுர்வேத புகைப்பழக்கம், ஆயுர்வேத மருத்துவத்தில் மிக முக்கியமான சிகிச்சை முறைகளில் ஒன்றாகும். இந்த சிகிச்சை முறைகளைக் கையாளும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவற்றைக் கையாள்வதற்கான வழிமுறைகள் உள்ளன. இந்த மருந்தக சிசிச்சை முறைகளைப் பயன்படுத்தும் நோயாளர்கள் உள்ளனர். அவ்வாறிருக்க, இதனைச் சாதாரண இனிப்புப் பானியைப் போன்று விநியோகிக்க முடியாது.

இது குறித்து அச்சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரான வைத்தியர் ஜீ. ரணசிங்க, ஆயுர்வேத சூத்திர குழுவின் எந்தவொரு அனுமதியையும் பெறாது சந்தைப்படுத்துவது ஆயுர்வேத சட்டத்துக்கு முரணானது. ஆகவே, இது சட்டவிரோத செயலாகும். அமைச்சரின் செயலாளர்கள் ஆயுர்வேத சூத்திர குழுவுக்கு வந்து இவற்றை அங்கீகரிகக்கோரி எமக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவார்களோ என நாம் அவதானத்துடன் இருக்கிறோம் என்று குறிப்பிட்டார். (எ)

# இலங்கையில் இன்னும் ஒரு லட்சம் குடும்பங்களுக்கு மின்சாரம் இல்லை

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் சுமார் ஒரு இலட்சம் குடும்பங்கள் இதுவரையில் மின்சாரம் பெற்றுக்கொள்ளவில்லை என்பது தெரியவந்துள்ளது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு ஒன்றின் போதே இந்த விடயம் தெரியவந்தது என இலங்கை மின்சார சபையின் தலைவர் பொறியியலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். இந்நிலையில் குறித்த குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார். (எ)

# இராணுவ சோதனை சாவடிகளை வடக்கில் நிரந்தரமாக்க முயற்சி!

வவுனியா,மார்ச்.21

வவுனியா - ஓமந்தையில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் நிலவும் காலப் பகுதியில், தற்காலிகமாக அமைக்கப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடியை நிரந்தரமாக்கும் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

நாட்டில் கடந்த வருடகாலமாக கொரோனா அச்சுறுத்தல் அதிகரித்து காணப்பட்டமையால், ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் மக்களை கண்காணிப்பதற்காக வவுனியாவில் ஓமந்தை உள்ளிட்ட பெரும்பாலான பகுதிகளில், தற்காலிக இராணுவச் சோதனைசாவடிகள் அமைக்கப்பட்டன.

நாட்டில் ஊடரங்கு தளர்த்தப்பட்டு வழமையான செயல்பாடுகளை முன்னெடுக்க அனைத்து மக்களும் தற்போது ஆரம்பித்து விட்டனர்.

இந்நிலையில் வவுனியா- ஓமந்தையில் அமைக்கப்பட்ட சோதனைச் சாவடியை நிரந்தரமாக்கும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

ஓமந்தை வீதிக்கு அருகிலுள்ள கரையில், சீமெந்திலான தளம் அமைக்கப்பட்டு, இரண்டு நிரந்தர கொட்டகைகள் அமைக்கப்பட்டு பாதுகாப்புப் பணியில் இராணுவத்தினர் ஈடுபடுகின்றனர் என மக்கள் சுட்டிக்காட்டினர். (எ)

ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ

**அரிசி ஆலை விற்பனைக்கு**

**அமைவிடம் :** புத்தூர் தெற்கு புத்தூரில் பெறுமதி மிக்க அரிசி ஆலை

அளவு - காணி-16 பரப்பு 15.5 குளி அரிசி ஆலை (விசாலமான நெல் உலர வைக்கும் பகுதி, நெல்தானிய சேமிப்புப் பகுதி (02), நெல் ஊற வைக்கும் பெரிய தொட்டிகள் (04), அலுவலக அறை, சமையலறை, ஊழியர் ஓய்வு அறை, கால்நடை வளர்ப்புப் பகுதி (100 வரை), உயிர்வாயு உற்பத்தி செய்யும் பகுதி அடங்கலாக)

**காணி விற்பனைக்கு**

**அமைவிடம் :** மானிப்பாய் வீதி கைதடியில் நன்னீர் வெட்டுக் கிணற்றுடன் கூடிய தென்னைப் பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்த பெறுமதியான காணிகள்

அளவு -
(1) காணி -15 பரப்பு 10.14 குளி கட்டடம் -737 சதுர அடி
(2) காணி -13 பரப்பு 10.14 குளி





**அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்**
021 224 0303, 021 224 0304
021 225 0065, 021 225 0067
011 266 1866

**கைத்தொலைபேசி இலக்கங்கள்**
077 880 2757 (திரு.சுகன்) 077 786 3040 (திரு.பெனட்)
076 131 1392 (திரு.ஜெரி)
தொலை நகல் 011 266 2820. ஈமெயில்-recovery@hnb.lk
**கேள்விக் கோரிக்கைகளை கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.**
**Head of Recoveries, Hatton National Bank PLC,**
**Recoveries Department,**
**Level 18, HNB Towers, No.479, T.B Jayah Mawatha,**
**Colombo 10.**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன்
சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்.அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன்
எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை - தற்காப்புக்கலை



**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)




6.00 மணி : HELLO கோடம்பாக்கம்
**இரவு**
7.00 மணி : SPOT LIGHT
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம்
10.00 மணி: பதிவு




## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)
**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே
(நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர
மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : நசரேத்துார்மரியா திரைப்படம்
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : மறை வகுப்பு
4.00 மணி : நிதர்சனம்
5.00 மணி : பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்